Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 188

வியாழக்கிழமை
02 ஜூன் 2022

வைகாசி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16
விலை : ரூ. 50

முச்சந்தி முரளி



"அப்போ இனிமேல் அரசாங்கத்துக்கு எதிரா 'குடிமக்களும்' களத்தில இறங்கப்போயினம் கண்டியளோ..."

# இறக்குமதிகளின் விலை எகிறுகின்றது இன்னும்!

## 200 வீதம்வரை அதிகரிக்கும் சாத்தியம்
## பல பொருள்களுக்கு வரிகள் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 2

புதிய சிறப்புப் பொருள்கள் வரி விதிப்பின் கீழ் அனைத்து இறக்குமதிப் பொருள்களின் விலைகளும் நேற்று முதல் 15 சதவீதம் முதல் 200 சதவீதம் வரையில் அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இலங்கை ரூபா மற்றும் டொலர் பற்றாக்குறை நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில் அரசாங்க வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் இந்த வரி அதிகரிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 15

## 369 பொருள்களுக்கான இறக்குமதித் தடை நீக்கம்

கொழும்பு, ஜூன் 2

இறக்குமதித் தடை விதிக்கப்பட்டிருந்த 369 வகையான அத்தியாவசியமற்ற பொருள்களுக்கான இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது நிலவும் வரிகள் உட்பட பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அப்பிள், யோக்கட், பட்டர், பேரீச்சம்பழம், சீஸ் உட்படப் பல பொருள்களுக்கு விதிக்கப்பட்டிருந்த இறக்குமதித் தடையே நீக்கப்பட்டுள்ளது. 15

## துமிந்த 'லபக்!'

கொழும்பு, ஜூன் 2

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் நேற்றுப் பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார். 15

## சிகரெட் விலையும் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 2

நேற்று நள்ளிரவு முதல் அனைத்து உள்ளூர் சிகரெட்டுக்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன 15

## மதுபான விலைகள் 'வெறித்தன' உயர்வு

கொழும்பு, ஜூன் 2

நேற்றுமுதல் நடைமுறைக்கு வரும்வகையில் 750 மில்லிலீற்றர் மதுபானப் போத்தல் ஒன்றின் விலை 520 ரூபாவால் அதிகரிக்கப்பட் 15

## சுகவீனமுற்ற இளைஞர் திடீரென உயிரிழப்பு!



யாழ்ப்பாணம், ஜூன் 2

சுழிபுரம், தொல்புரம் கிழக்கில் திடீர் சுகவீனம் காரணமாக இளைஞர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். பாலசந்திரமூர்த்தி பார்த்தீபன் (வயது-33) என்ற இளைஞரே 15

## பரீட்சை மண்டபத்தில் மாணவர்கள் மோதல்!

கொழும்பு, ஜூன் 2

கிளிநொச்சியிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் பரீட்சை மண்டபத்தில் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டுள்ளனர். 15

## இன்றும் 600 சிலிண்டர்கள்

### யாழ்., நல்லூர், கோப்பாய், உடுவில் பிரதேச செயலகப் பிரிவுகளில் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளில் தலா 150 சிலிண்டர்கள் வீதம் இன்றும் விநியோகம் செய்யப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. 15

## நீரில் மூழ்கியே மாணவி மரணம்

வவுனியா, ஜூன் 2

வவுனியா, கணேசபுரத்தில் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட மாணவி ராசேந்திரன் யதுர்சி நீரில் மூழ்கியதாலேயே உயிரிழந்துள்ளார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் 08

## மயங்கி வீழ்ந்த மூதாட்டி சாவு!

### அயலவர் தாக்கியதை முறைப்பாடு செய்த பின்னர் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

அயல் வீட்டில் வசிப்பவர் தன்னைத் தாக்கினார் என்று நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் 15

## மின்சாரம் தாக்கி 4 வயது சிறுமி சாவு!

### கிளிநொச்சியில் சோகம்



கிளிநொச்சி, ஜூன் 2

வீட்டில் இருந்த 'பிளக்கில்' கைபிடியற்ற ஸ்குரு ட்ரைவரைச் செலுத்திய 4 வயதுச் சிறுமி மின்தாக்கியதில் பரிதாபகர 03

வேலை வாய்ப்பு
பணிப்பெண் தேவை

சாவகச்சேரி சங்கத்தானையில் மீனாட்சி அம்மன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் தங்கி நின்று வயோதிபப் பெண்மணியைப் பராமரிப்பதற்கு 19 முதல் 50 வயதிற்குட்பட்ட சைவ போசனமுடைய பணிப் பெண் தேவை. தங்குமிடம், உணவு இலவசம். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
(CS 1047) (3/6)

தொடர்பு 076 937 4135

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை முறைமை இருப்பதால் நிறைவேற்றதிகாரம் தொடரவேண்டும்

## பௌத்தபீடங்களின் வழியில் சுதந்திரக் கட்சியும் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 2

**மாகாணசபைகள் சுயாட்சி கோருவதைக் கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்த பின்னரே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படவேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அத்துடன், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை உடன் நீக்கப்பட வேண்டும் என அடம் பிடித்தால், அது 21 ஐயும் தாமதப்படுத்திவிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர், சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்ட வரைவு ஊடாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிகாரம் செல்வதை சிலர் விரும்பவில்லை. இங்கு நபர்கள் முக்கியம் அல்லர். நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்களை மட்டுப்படுத்தி, நாடாளுமன்றத்தை பலப்படுத்துவதே இதன் நோக்கம். அந்த அடிப்படையில்தான் 21 ஐ சுதந்திரக்கட்சி ஆதரிக்கின்றது.

இதற்கிடையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கவேண்டும் எனவும் வலியுறுத்துகின்றனர். அதனை செய்வதாக இருந்தால், சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்ல வேண்டிவரும். இந்த முயற்சி 21 ஐயும் தாமதப்படுத்தும். எனவே, முதற்கட்டமாக 21 ஐ நிறைவேற்றிக்கொள்ளவேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை 1978 இல் நடைமுறைக்கு வந்தது. அப்போது சுதந்திரக்கட்சி அதனை எதிர்த்தது. எனினும், 88 காலப்பகுதியில் மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது. மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட்டன. எனினும், ஆளுநர்கள் ஊடாக ஜனாதிபதி மாகாணங்களைக் கட்டுப்படுத்தி, ஒற்றையாட்சியைப் பாதுகாத்தார்.

எனவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட்டால் ஆளுநரின் அதிகாரத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது, ஒற்றையாட்சியை எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்து ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

அடுத்ததாக விகிதாசார தேர்தல் முறைமையின்கீழ் 89, 2010 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிலேயே கட்சிகளுக்கு ஆட்சி அமைப்பதற்கான அறுதிப்பெரும்பான்மை கிடைத்துள்ளது. ஏனைய சந்தர்ப்பங்களில் ஜனாதிபதியின் தலைமையீட்டுடன் எதிரணிகளின் ஒத்துழைப்பை பெற்றே, ஆட்சி நிறுவப்பட்டுள்ளது. எனவே, உறுதிப்பாடான அரசு தொடர்பிலும் தீர்மானிக்கப்படவேண்டும்.

இவ்விரண்டு ஏற்பாடுகளை செய்த பின்னரே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தொடர்பில் தீர்மானிக்கப்பட வேண்டும் - என்றார்.

இதேவேளை, 13ஆம் திருத்தச் சட்டம் மாகாணசபை முறைமை இருப்பதால் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படக்கூடாது என்று அஸ்கிரியபீடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-44)

# அரச தரப்பு எம்.பிக்களின் வீடுகளை முற்றுகையிடுக!

## எரிவாயுவுக்குப் போராடிய மக்களுக்கு சாணக்கியன் எம்.பி. 'அட்வைஸ்'



கொழும்பு, ஜூன் 2

எரிவாயுகோரி போராடுபவர்கள் வீதியை மறித்து போராடுவதால் பயனில்லை. மாவட்டத்திலுள்ள அரச தரப்பு அரசியல்வாதிகளின் வீடுகளையும், அலுவலகங்களையும் முற்றுகையிட்டுப் போராடுங்கள் என மட்டக்களப்பில் எரிவாயுகோரி போராடிய மக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்.

எரிவாயுகோரி மட்டக்களப்பு பயனியர் வீதியை மறித்து மக்கள் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர். வீதியை மறித்து மக்கள் போராடுவதை பொலிஸார் தடுத்தனர். சம்பவ இடத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோவிந்தன் கருணாகரம், இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோர் சென்றனர். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

மட்டக்களப்பு மாவட்டத்தின் இரண்டு ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கொழும்பில் இராஜாங்க அமைச்சுப் பதவிக்காக காத்திருக்கிறார்கள். மாவட்ட நிர்வாகத்தை ஒழுங்கமைக்க, மக்களுக்குத் தேவையானவற்றை பேசி பெற்றுத்தரும் நிலையில் இல்லை. விநியோகிக்கப்படும் எரிவாயுவில் 60 வீதத்தை கொழும்பு, கம்பஹாவுக்கு அனுப்புவது முறையற்ற தீர்மானம். எதற்காக 60 வீதமான எரிவாயு அங்கு பகிரப்பட வேண்டும்? அங்குள்ள மக்கள் போராடி, அரசியல்வாதிகளின் வீடுகளை எரித்தமையினாலேயே அப்படியான பிரச்சினை வரக்கூடாதென் பதற்காக அங்கு அதிகமாக எரிவாயு விநியோகிக்கப்படுகிறது.

மட்டக்களப்புக்கு எரிவாயு தேவையெனில் அது உங்களின் கைகளிலேயே உள்ளது. எரிவாயுவுக்காக வீதியை மறித்துப் போராடுவதால் பயனில்லை. அதனால் மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். எரிவாயுவை வரவைக்க மாவட்ட செயலகத்தையும், ஆளுந்தரப்புப் பிரமுகர்களின் வீடுகள், அலுவலகங்களையும் முற்றுகையிட்டு போராடவேண்டும். மட்டக்களப்பு மாவட்ட செயலகம், வியாழேந்திரனின் வீடு, பிள்ளையானின் அலுவலகம், பிள்ளையானின் வீடு என்பனவற்றை முற்றுகையிடவேண்டும் - என்றார். (ம)

# ஜனாதிபதிக்கு தொடர்ந்தும் நிறைவேற்று அதிகாரங்கள்!

## அதில் கைவைக்கக்கூடாது என கெவிந்து குமாரதுங்க வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 2

மாகாண சபைகளைப் பாதுகாத்து அதனை முன்கொண்டு செல்வதாயின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவி பாதுகாக்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க தெரிவித்தார்;.

தென்னிலங்கை ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைக்கு முன்வைக் கப்பட்டுள்ள 21ஆம் திருத்த வரைவு நிறைவேற்றப்பட்டால் அது ஒட்டுமொத்த நாட்டின் வெற்றியாக கருதப்படும். அரசியல், பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் ஒரே நேரத்தில் நெருக்கடியை எதிர்கொள்ளும்போது முதலில் பொருளாதார நெருக்கடி குறித்தே கவனம் செலுத்த வேண்டும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவி பாதுகாக்கப்படவேண்டும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவி இருக்கும் காரணத்தினால்தான் தற்போதைக்கு நடைமுறையில் உள்ள மாகாணசபைகள் முறையை பொதுமக்கள் கருத்துக் கணிப்பு இன்றி தொடர்ந்து முன்கொண்டு செல்ல முடிகின்றது.

அதே போன்று விகிதாசாரத் தேர்தல் முறையில் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத நிலையிலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைக் கொண்டு நிலையான ஆட்சியொன்றைத் தரமுடியும் - என்றார். (ம)



# எரிவாயு வழங்கப்படாததால் கிளி.யில் ஏ - 9 வீதி முடக்கம்

கிளிநொச்சி, ஜூன் 2

கிளிநொச்சியில் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படாததால் பொதுமக்கள் ஏ-9 வீதியை மறித்து நேற்று போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கிளிநொச்சிக்கு நேற்று சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வந்ததையடுத்து பொதுமக்கள் நேற்று அதிகாலை முதல் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். எனினும் அவர்களுக்கு எரிவாயு சிலிண்டர் வழங்கப்படவில்லை. ஆவேசமடைந்த பொதுமக்கள் எரிவாயு சிலிண்டர்களை ஏ-9 வீதியின் குறுக்காக வைத்து வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்தப்பகுதியில் சற்றுநேரம் பதற்றமான சூழல் உருவாகியது. அதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த கிளிநொச்சி பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். எரிவாயு சிலிண்டர் விநியோகஸ்தருடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சின் அடிப்படையில் வர்த்தக நிலையங்களுக்கு எரிவாயு சிலிண்டரை பங்கிட்டு வழங்காமல், அங்கிருந்த மக்களுக்கு விநியோகிக்க இணக்கம் காணப்பட்டது. டோக்கன் மூலம் எரிவாயு சிலிண்டர் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை அடுத்து பொதுமக்கள் போராட்டத்திலிருந்து விலகினர். (ஒ-14.113)

# இலங்கைக்கு 500 மில்லியன் யுவான் சீனா மீண்டும் வலை!

கொழும்பு, ஜூன் 2

சீன அரசாங்கத்தால் இலங்கைக்கு 500 மில்லியன் யுவான் மானியமாக வழங்கப்படவுள்ளது. இதன் முதல் தொகுதி நாளை வெள்ளிக்கிழமை இலங்கைக்குக் கிடைக்கும் என்று சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் சீனத் தூதரகம் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அதிகாரிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகவே இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன. இலங்கைக்கு தேவையான வாழ்வாதார உதவிகளை வழங்க பிரதமர் லீ கெகியாங் நடவடிக்கை எடுத்துள்ளார்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சீனா ஐந்து வகையான உதவிகளை இலங்கைக்கு வழங்கி வருகின்றது. வேகமாக செயற்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், அதிகளவான வெளிநாட்டு நேரடி முதலீடு, வர்த்தகம், இருதரப்பு கடன் தீர்வு மற்றும் இலங்கைக்கான ஆதரவு ஆகியவற்றை கருத்தில் கொண்டே சீனா இலங்கைக்கு உதவி வருகின்றது - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கச்சதீவு தொடர்பில்

# தமிழக முதல்வரின் கருத்து இந்திய நிலைப்பாடு அல்ல!

## கருத்திலெடுக்க வேண்டாமென அமைச்சர் பந்துல தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 2**
**'கச்சதீவு தொடர்பில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டா லின் வெளியிட்டுள்ள கருத்துத் தொடர்பில் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. அது அவரின் தனிப்பட்ட கருத்து. இந்திய அரசின் நிலைப்பாடு அல்ல' இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது. "இந்தியப் பிரதமர் மோடி பங்கேற்றிருந்த நிகழ்வொன்றின்போது. இலங்கை வசமுள்ள கச்சதீவை மீளப்பெறுவதற்கு இதுவே சிறந்த தருணம்" என தமிழக முதல்வர் குறிப்பிட்டிருந்தார். இதுதொடர்பில் இலங்கை அரசின் நிலைப்பாடு என்னவென எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் பந்துல குணவர்தன, "ஒவ்வொரு நாட்டிலும் மாநிலங்களில் உள்ள அரசியல் தலைவர்களின் கருத்துகள் மாறுபடலாம். உதாரணமாக வடக்கு மாகாண முதல்வர் பதவியை விக்னேஸ்வரன் வகித்தபோது. அவர் பல விதமான அறிவிப்புகளை வெளியிட்டிருந்தார். இவை அரசின் நிலைப்பாடு அல்ல. அவற்றை அரசின் நிலைப்பாடாக சர்வதேசமும் ஏற்காது. அந்தவகையில் தனது தனிப்பட்ட கருத்தை தமிழக முதல்வர் வெளியிட்டிருக்கலாம். இதுதொடர்பில் பிரதமர் மோடி எந்தவொரு பதிலையும் வழங்கவில்லை. இதன்மூலம் இந்தியாவின் நிலைப்பாடு மாறவில்லை என்பதை அறியமுடிகின்றது" - என்றார். (ம-44)

# இன்று தொடக்கம் மீண்டும் மின்வெட்டு

கொழும்பு, மே 2
நாட்டில் இன்று 2 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் மின்வெட்டை நடைமுறைப்படுத்த இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனப் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி இன்று முதல் 5 ஆம் திகதி வரை மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் நேர அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது. அட்டவணையின்படி இன்று 2ஆம் திகதியும் நாளை 3 ஆம் திகதியும் இரண்டு மணிநேர மின்வெட்டு நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

நாளைமறுதினம் 4 ஆம் திகதி ஒரு மணிநேர மின்வெட்டும் மறுநாள் 5 ஆம் திகதி மின்வெட்டு இல்லை எனவும் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அறிவித்துள்ளது. இதேவேளை நேற்று நாட்டில் 2 மணிநேர மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD, JAFFNA
கணித, உயிரியல் பிரிவு 2024 A/L
நேரடி வகுப்புக்கள், நிகழ்நிலை வகுப்புக்கள்
தமிழ்மொழி மூலம், ஆங்கில மொழி மூலம்
எமது ஆசிரியர் குழுவுடன்
ஆரம்பம்
05.06.2022 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணி
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
தொடர்பு 077 791 7611
076 569 3006, 076 566 3006
(CR 36062) (3-6)

## வார இறுதியில் நாட்டுக்கு மேலுமொரு எரிவாயுக் கப்பல்

கொழும்பு, ஜூன் 2
நாட்டுக்கு 25 ஆயிரம் மெற்றிக் தொன் எரிவாயுவுடனான கப்பல் ஒன்று இந்தவார இறுதியில் வந்தடையவுள்ளது என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் வெள்ளிக்கிழமைவரை நாள்தோறும் 50 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்பட வுள்ளன.

இவற்றில் 60 சதவீதமான 30 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்கள் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கு விநியோகிக் கப்படவுள்ளன என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச-இ)




ஏட்டிக்குப் போட்டியா மீட்டிங் வைச்சு விளையாடுறதைப் பற்றி நேற்று உங்களுக்குப் பட்சி சொன்னதெல்லோ. அதில ஒரு மீட்டிங் நேற்று கச்சேரியில நடந்தது. கனவுக்கார எம்.பி. தான் அதுக்குத் தலைவர். முந்தி ஒண்டா நிண்ட கனவுக்கார கும்பல் இப்ப அப்பாவா? சித்தப்புவா? எண்ட ஈகோ பிரச்சினையில ரண்டா தெறிச்சுப் போச்சுது. சித்தப்புவின்ர பேரில உள்ள பெற்றோல் செற் எல்லாம் முந்தி கனவுக்காரரின்ர எண்டுதான் சனம் கதைச்சது. ஆனால், இவையின்ர உள்வீட்டுச் சண்டையில, அந்த செற் எல்லாம் சித்தப்புவுக்குத்தான் சொந்தம் எண்டது வெளியில வந்திட்டுது. ஆனாலும் கனவுக்கார எம்.பியின்ர பவரை வைச்சுத்தான் அந்த செற்றுகளுக்கு லைசென்ஸ் எடுத்தவை எண்டது வேற கதை. இப்ப சித்தப்புவோட ஆகாது எண்டதால, அவருக்கு எதிரா கனவுக்காரர் கிட்டடியில அறிக்கையெல்லாம் விட்டவர். இந்த நிலைமையில நேற்று நடந்த கச்சேரிக் கூட்டத்திலையும் "இப்ப கன இடத்தில பொலிஸ்காரர் பெற்றோல், டீசல் பதுக்கி வைச்சிருக்கிற ஆக்களை பிடிக்கினம். ஆனால், அவை மட்டும் குற்றவாளிகள் இல்லை. அவைக்கு அப்பிடி சட்டவிரோதமா பெற்றோல் குடுத்த செற் காரரையும் பிடிக்க வேணும். எந்த செற்றில இருந்து இப்பிடி பெற்றோலை அளவுகணக்கில்லாமல் அவை களவா வாங்கினவை எண்டதைக் கண்டுபிடிக்க வேணும்" எண்டதையே கனவுக்கார எம்.பி. திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு இருந்திருக்கிறார். அதாவது சித்தப்புவின்ர செற்றில இருந்துதான் அப்பிடி பதுக்கல் காரருக்கு பெற்றோல் போகுதெண்டு தெரிஞ்சுதான், அவரை மாட்டிவிட இப்பிடி கனவுக்கார எம்.பி. சொன்னதையே திரும்பத் திரும்பச் சொன்னாரோ எண்டதுதான் அங்க இருந்த கனபேரின்ர டவுட்.

அதோட கனவுக்கார எம்.பி. மினக்கெட்டு இந்த மீட்டிங்கை ஒழுங்கு செய்தது 'அத்தியாவசியப் பொருள் விநியோகம்' பற்றியும் கதைக்கத்தான். சனங்கள் எல்லாம் அரிசி, பால்மா, எரிபொருள், சீனி எண்டு அவசியமான சாமான்களே இல்லையெண்டு அந்தரப்பட்டுக்கொண்டு நிக்கேக்க, எங்கட கனவுக்கார எம்.பி "கொழும்பில நியூட்டெல்லா ( கண்டோஸ் மாதிரி பணக்காரர் பாணோடு தொட்டுச் சாப்பிடுற வெளிநாட்டுச் சாமான்) ஆயிரத்து இருநூறு விக்குது. அதே நியூட்டெல்லா யாழ்ப்பாணத்தில ரண்டாயிரத்து ஐநூறு விக்குது. இதைக்கட்டுப்படுத்த வேணும்" எண்டு தனக்கு 'அத்தியாவசியமான' பொருளைப்பற்றி கவலையோட சொன்னார். பனடோலுக்கு வழியில்லாம சனம் இருக்கேக்க அவருக்கு நியூட்டெல்லா கேக்குதோ? எண்டு அங்க இருந்தவை நமட்டுச் சிரிப்போட ஆளைப்பாத்திச்சினமாம்.

கனவுக்கார எம்.பி வாய்க்கு வந்ததை எல்லாம் அடிச்சுவிட, அதுக்கு கச்சேரிப் பெரியவர் தலையாட்டுறதுதான் வழக்கமா நடக்கிறது. ஆனால் நேற்று கனவுக்காரர் விட்ட ரீலுக்கு கச்சேரிப் பெரியவர் குடுத்த மறுத்தான் தான் ஹைலைட். ஓசித் தேங்காயெடுத்து ஏசிப்பிள்ளையாருக்கு அடிக்கிறவர் எங்கட கனவுக்காரர். சனங்களுக்கு என்ன நிவாரணம் குடுத்தாலும், என்ன திட்டம் வந்தாலும் அதில தானும் தலையை நுழைச்சு, புறிம்பா ஒரு லிஸ்ட் அடிச்சு, அவைக்கு அந்தத் திட்டத்தை குடுக்கப் பண்ணி, தன்னாலதான் அந்தத் திட்டம் கிடைச்சது எண்டு கொக்கரிக்கிறதுதான் கனவுக்காரரின்ர பாழாப்போன வேலை. ஆனால் அந்தப் பிளான் தமிழக நிவாரணத்தில சரிவரேலை. அதால அந்த நிவாரணத்தில கனக்க குளறுபடி எண்டு நேற்றையான் கூட்டத்தில அவர் புலம்பியிருக்கிறார்.

"தமிழக நிவாரணம் பற்றி கனக்க முறைப்பாடு வந்திருக்கு. கனபேருக்கு பத்துகிலோ அரிசிக்கு பதிலா அஞ்சு கிலோ குடுபட்டிருக்கு" எண்டு அடிச்சு விட்டிருக்கிறார். அப்ப குறுக்கிட்ட கச்சேரிப் பெரியவர் 'அதெப்பிடி நடக்கும்? அரிசி பத்து கிலோ பையில தனித்தனியா அடைச்சு வந்திருக்கு. அப்ப எப்பிடி அஞ்சு கிலோ குடுபட்டிருக்கும்?' எண்டு அவர் திருப்பியடிக்க, கனவுக்காரரின்ர முகம் போன போக்கைப் பாக்க வேணுமே. கெட்டிக்காரன் புளுகே எட்டுநாளைக்காம், அப்பிடியிருக்க கனவுக்காரரின்ர புளுகு எட்டு செக்கன் கூட நிண்டுபிடிக்காதது அதிசயமில்லைத்தானே.



- பட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியக் கடனில் இறக்குமதியாகும் பொருள்களின் விலை அதிகம்

கொழும்பு, ஜுன் 2

**இந்தியக் கடன் அடிப்படையின்கீழ் இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருள்கள், அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது என சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

நாட்டுக்கு சீனி, கோதுமை மா, மிளகாய் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப்பொருள்கள் இந்திய அரசின் கடன் வசதியின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்றன. இவற்றை இறக்குமதி செய்வதற்கு செலவிடப்படும் தொகையைவிட மிக அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இறக்குமதி செய்யப்படும் வெள்ளைச்சீனி ஒரு கிலோவுக்கு 159 ரூபா செலவிடப்படுவதுடன் 5 ரூபா வரி செலுத்தப்படுகிறது. அதன்படி ஒரு கிலோ சீனியின் விலை 164 என்ற போதிலும் நாட்டில் 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ கிராம் வெள்ளை அரிசி 158 ரூபா என்ற போதிலும் 190 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 165 ரூபா என்ற போதிலும் 250 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

ஒரு கிலோ கிராம் காய்ந்த மிளகாய் ஆயிரத்து 49 ரூபா என்ற போதிலும் ஆயிரத்து 750 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன் ஒரு கிலோ கிராம் எடையுடைய கோழி இறைச்சி பாகங்கள் 500 ரூபா என்ற போதிலும் 750 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது என அரசின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

## 35 டொலருக்கு கச்சா எண்ணெய் இணக்கம் வெளியிட்டதா ரஷ்யா?

கொழும்பு, ஜுன் 2

ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் 35 டொலர் என்ற அடிப்படையில் இலங்கைக்கு விற்பனை செய்ய ரஷ்யா இணக்கம் வெளியிட்டுள்ளதாக தெற்கு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்பொழுது ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் 110 டொலர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்ற நிலையில், 35 டொலர் என்ற மானிய விலையில் இலங்கைக்கு ரஷ்யா கச்சா எண்ணெய் தரவுள்ளது என்று அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

டுபாய் நிறுவனம் ஒன்றின் ஊடாக இந்தக் கொள்வனவு இடம்பெறவுள்ளது என்றும் இந்த நிறுவனம் தெற்கின் அரசியல்வாதி ஒருவருக்குச் சொந்தமானது என்று கொழும்பு செய்திக் குறிப்பில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும் இந்தத் தகவல்களை மறுத்துள்ள பெற்றோலியத் துறை, இது தொடர்பில் விசாரணையை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரிடம் முறைப்பாடு வழங்கியுள்ளது. (ம)

## தக்க நேரத்தில் உரம் வரும் நம்பிக்கையுடன் களமிறங்குக

### விவசாயிகளுக்கு அரசாங்கம் பணிப்பு

கொழும்பு, ஜுன் 2

உரம் கிடைக்குமா என்று சந்தேகம் கொள்ளாமல், உரம் வரும்வரையில் பார்த்துக்கொண்டிருக்காமல் விவசாயிகள் நம்பிக்கையுடன் விவசாய நடவடிக்கையில் ஈடுபடவேண்டும். தக்க நேரத்தில் அரசாங்கம் உரம் வழங்கியே தீரும் என்று தெரிவித்தார் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலக உணவு நெருக்கடியை எதிர்கொள்வதற்காக விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டங்கள் தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. இரசாயன மற்றும் சேதன உரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 7 பிரதான நாடுகளிடம் எழுத்துமூலம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இந்தியாவுடன் தற்போது நேரடிப் பேச்சு முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. சுமார் 65ஆயிரம் மெற்றிக்தொன் உரம் இந்தியாவிடமிருந்து பெறப்பட வாய்ப்புக்கள் உள்ளன -என்றார்.

கடந்த பெரும்போகத்தின்போதும் இவ்வாறானதொரு நம்பிக்கையை அரசாங்கம் வழங்கியிருந்தபோதிலும், இறுதிவரை விவசாயிகளுக்கு உரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பதுடன், அதனால் ஏற்பட்ட இழப்புக்களுக்கும் அரசாங்கம் உரியமுறையில் பொறுப்புக்கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-இ)



## மருந்துகள் பற்றாக்குறை; ஆபத்தின் விளிம்பில் நாடு

கொழும்பு, ஜுன் 2

நாட்டில் பற்றாக்குறையாகவுள்ள அத்தியாவசிய மருந்துகள் விரைவில் இறக்குமதி செய்யப்படாவிடின் எதிர்காலத்தில் பெரும் ஆபத்தை எதிர்நோக்கவேண்டி வரலாம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் மருந்துப் பொருள்களின் விலைகள் அதிகரித்துவருகின்றன. மருந்துகளை இறக்குமதி செய்ய டொலர் இல்லாத நிலையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது 12 முதல் 20 வரையான அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது என மருத்துவர் சமின் விஜேசிங்க தெரிவித்தார். அத்துடன் 120 முதல் 150 வரை அத்தியாவசியமற்ற மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்த நிலை நீடித்தால் நோயாளிகள் பாதிக்கப்பட்டு நாடு பெரும் ஆபத்தை எதிர்நோக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்யத் தீர்மானம்

கொழும்பு, ஜுன் 2

தட்டுப்பாடு நிலவும் அத்தியாவசியப் பொருள்களை தனியார்துறைக்குப் போட்டியாக அரசாங்கமும் இறக்குமதி செய்து சந்தையில் போட்டித்தன்மையை ஏற்படுத்த தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நான் வர்த்தகத்துறை அமைச்சராகச் செயற்பட்டபோது அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் நிர்ணயவிலைகள் பேணப்பட்டு வந்தன. எனினும் காலப்போக்கில் வர்த்தகர்கள் தாம் தீர்மானிக்கும் விலைகளில் பொருள்களை விற்பனை செய்யத் தொடங்கியுள்ளனர். அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவும் இந்த நெருக்கடி காலத்தில் விலைகளுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டால், கறுப்புச் சந்தைகள் உருவாகும். அத்தோடு பொருள்களும் பதுக்கப்படும்.

இதனைக் கருத்திற்கொண்டு தனியார் துறைக்குப் போட்டியாக அத்தியாவசியப் பொருள்களை அரசாங்கமும் இறக்குமதி செய்தால் சந்தையில் போட்டித் தன்மை ஏற்படும். போட்டித்தன்மை ஏற்படும்போது பொருள்களின் விலைகள் சடுதியாக அதிகரிப்பதோ அல்லது தட்டுப்பாடோ ஏற்படாது -என்றார். (ஒ-14-இ)

## வரித் திருத்தத்தை ஐ.ம.ச. எதிர்க்காது

கொழும்பு, ஜுன் 2

அரசாங்கத்தின் வருவாயை மேம்படுத்துவதற்காக நேரடி வரிகள் தொடர்பான விதிமுறைகளை திருத்தும் நடவடிக்கையை எதிர்க்கப்போவதில்லை என எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

2019ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம் செல்வந்தர்கள் மீதான வரியைக் குறைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டது. இதனால் முழு நாடும் பாதிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கடுமையான வரிவசூல் பொறிமுறை இல்லாததால், உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச அமைப்புக்கள் சீர்திருத்தங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளன. எனவே, நாட்டிலுள்ள சாதாரண நுகர்வோர்மீது சுமையை ஏற்படுத்தாமல் பொருத்தமான வரிக்கொள்கைகளை அதிகாரிகள் செயற்படுத்தவேண்டும் -என்றார். (ம)

### சர்வதேச விலையேற்றத்துக்கு முன்

## அரிசியைக் களஞ்சியப்படுத்த அரசாங்கம் துரித நடவடிக்கை

கொழும்பு, ஜுன் 2

சர்வதேச சந்தையில் அரிசியின் விலை அதிகரிப்பதற்கு முன்னர், ஒருதொகை அரிசியை இறக்குமதி செய்து களஞ்சியப்படுத்திவைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவித்தார் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வருடத்தில் இதுவரையில் 3 லட்சத்து 38 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. உலகில் அரிசியின் விலை அதிகரிப்பதற்கு முன்னர் மேலும் தேவையானளவு அரிசியை இறக்குமதி செய்வது தொடர்பில் ஆராயப்பட்டுவருகிறது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் அரிசியை நிவாரண விலையில் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அரிசியை அரசாங்கம் நேரடியாக அதிக விலைக்குப்பெற்று மக்களுக்கு நிவாரண விலையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்த வருடத்திலும் அரிசி இறக்குமதியை முற்றாக தவிர்ப்பதை இலக்காகக் கொண்டு நெற்பயிர்செய்கையை விவசாயிகள் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் -என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21ஆவது திருத்தத்துக்கு ஜனாதிபதி இணக்கம்!

## பெரமுனவினரிடம் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 2**

**அரசமைப்பின் 21ஆவது திருத்தம் எனது முழுமையான சம்மதத்துடன்தான் கொண்டுவரப்படுகின்றது என்று தெரிவித்தார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.**

பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்றுமுன்தினம் நடத்திய சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, பசில் ராஜபக்ச மற்றும் எதிர்க்கட்சியில் இருந்து வந்து அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பல்வேறு தரப்பினர் கலந்துகொண்டனர்.

இதன்போது, நீதி மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜேதாஸ ராஜபக்ச 21ஆவது திருத்தம் தொடர்பில் முதலில் விளக்கமளித்திருந்தார். இரட்டைக் குடியுரிமையை நீக்குதல் உள்ளிட்ட 21ஆவது திருத்த வரைவின் உள்ளடக்கங்கள் குறித்தும் அமைச்சர் விரிவாக எடுத்துரைத்தார். (ம)



## பொலிஸ் அலுவலர் விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 2

இரத்தினபுரி பெல்மதுல்ல வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் பெல்மதுல்ல பொலிஸ் நிலையத்தின் துணைப் பரிசோதகர் உயிரிழந்தார்.

குறித்த பொலிஸ் அலுவலர் செலுத்திச்சென்ற முச்சக்கரவண்டி கட்டுப்பாட்டை இழந்து, மாறி எதிர்த்திசையில் வந்த பாரவூர்தியின் மீது நேருக்கு நேர் மோதியுள்ளது. இதன்போது படுகாயமடைந்த குறித்த பொலிஸ் அலுவலர் இரத்தினபுரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். (ம)

## சீரற்ற காலநிலை; ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 2

இரத்தினபுரி குருவிட்ட பகுதியில் நிலவிய சீரற்ற காலநிலையால் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நிவாரண சேவை அதிகாரியாகப் பணியாற்றும் குறித்த நபர் பணியில் ஈடுபட்டவேளை வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார் என இடர்முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை சீரற்ற காலநிலையால் 6 மாவட்டங்களுக்கு உட்பட்ட 144 குடும்பங்களைச் சேர்ந்த 576 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் 236 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ மையத்தின் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்தார். (ச-இ)

## 21ஆவது திருத்தம் தொடர்பில் இன்று தெளிவுபடுத்துகிறார் நீதியமைச்சர்!

கொழும்பு, ஜூன் 2

அரசமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பில், நீதி அமைச்சரால் இன்று கட்சித் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்தப்படவுள்ளது. இதன் பின்னர் அதில் செய்யப்படவேண்டிய மாற்றங்கள் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன நேற்றுமுன்தினம் தெரிவித்ததாவது:

21ஆவது திருத்தம் தொடர்பில் இன்னமும் உறுதியான எந்த நிலைப்பாடும் எட்டப்படவில்லை. இதுதொடர்பில் பல்வேறு அரசியல் கட்சிகளும் பல்வேறு திருத்தங்களை, மாற்றங்களை சுட்டிக்காட்டி வருகின்றன. ஐக்கிய மக்கள் சக்தி நேற்றுமுன்தினம் சில பரிந்துரைகளை நீதியமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளது.

ஆதலால், 21 ஆவது திருத்தம் தொடர்பாக அனைத்துத் தரப்பினருக்கும் தெளிவூட்ட வேண்டிய தேவை இருக்கின்றது. அதனடிப்படையில் கட்சித் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நீதி அமைச்சர் வியாழக்கிழமை (இன்று) தெளிவூட்டல்களை வழங்கவுள்ளார். அதன் பின்னர் அனைவரினதும் கருத்துக்களும் கேட்கப்பட்டு அவற்றை இறுதிசெய்வது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறும்.

இவை அனைத்தும் இந்த வாரம் நிறைவுசெய்யப்பட்டு பின்னர் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் 21 ஆவது திருத்த வரைவு பாரப்படுத்தப்படும் - என்றார். (ம)

வருடாவருடம்

## இராணுவ அதிகாரிகளுக்கு 27லட்சம் லீற்றர் பெற்றோல்

### பொதுமக்கள் விசனம்

கொழும்பு, ஜூன் 2

இலங்கை இராணுவத்தின் முதற்தர அதிகாரிகளுக்கு மட்டும் ஒவ்வொரு வருடமும் சுமார் 27 லட்சத்துக்கும் அதிகமான பெற்றோல் ஒதுக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தின் முதற்தர அதிகாரிகளாக (லெப்டினன்ட் கேணல் தொடக்கம் இராணுவத் தளபதி வரையான பதவிநிலைகள்) தற்போதைக்கு ஆயிரத்து 108 பேர் கடமையாற்றுகின்றனர். யுத்த காலம் தொட்டு இராணுவத்தின் முதற்தர பதவி நிலையில் உள்ளவர்களுக்கு தனிப்பட்ட பயன்பாட்டுக்கு என ஒரு வாகனம் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் மாதாந்த வாடகை சுமார் ஒரு லட்சமாகும். பெரும்பாலான இராணுவ அதிகாரிகள் தங்கள் சொந்த வாகனத்தையே பயன்படுத்திக்கொண்டு இராணுவ வாகனத்துக்கான வாடகைப் பணத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். அதேநேரம் சிலர் இராணுவ வாகனத்தை தமது குடும்பத்தின் தேவைக்காகப் பயன்படுத்துகின்றனர்.

இப்படியாக, எரிபொருள் பற்றாக்குறைக்கு மத்தியில் இராணுவ மேலதிகாரிகளுக்கு மாதமொன்றுக்கு 200 லீற்றருக்கும் மேல் இலவசமாக எரி பொருள் வழங்கப்படுகின்றது. இதன் காரணமாக வருடமொன்றுக்கு 27 லட்சம் லீற்றருக்கும் அதிகமான எரிபொருள் ஒதுக்கப்படுகின்றது. விமானப்படை மற்றும் கடற்படையினருக்கும் எரிபொருள் ஒதுக்கீடுகள் உள்ளபோதிலும் இராணுவத்தினருக்கு வழங்கப்படும் ஒதுக்கீடுகள் மிகை அதிகம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ம)

## வெள்ள நிவாரணம்; பிரதமர் பணிப்பு



கொழும்பு, ஜூன் 2

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலையால் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, களுத்துறை, கம்பஹா மற்றும் காலி ஆகிய மாவட்ட செயலாளர்களுக்கு இடையில் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

இதன்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக திறைசேரி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த நிவாரண நிதியை ஒவ்வோர் மாவட்ட செயலாளர்கள் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுங்கள் எனத் திறைசேரிக்கு பிரதமர் பணித்துள்ளார்.

இதேவேளை மழையுடனான வானிலையும் காற்று நிலைமையும் அடுத்த சில நாள்களுக்கு அதிகரிக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களத்தால் எதிர்வுகூறப்பட்டுள்ளது. (ச-இ)

## 21ஆம் திருத்தத்தை நிச்சயம் எதிர்ப்பேன்

### சரத் வீரசேகர தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 2

21ஆவது அரசமைப்புத் திருத்த வரைவை நிச்சயம் நான் எதிர்ப்பேன் என்று தெரிவித்தார் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர.

ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் நேற்றுமுன்தினம் மாலை நடத்திய கலந்தாலோசனையின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்ட 19ஆவது திருத்தச் சட்டத்துக்கும் நான் ஆதரவளிக்கவில்லை. தற்போதைய 21 ஆவது திருத்தச் சட்டத்தையும் ஆதரிக்கப் போவதில்லை. 21 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பான வரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும்போது நிச்சயம் நான் அதை எதிர்ப்பேன் - என்றார். (ம)

## சீனா அரசாங்கத்தால் மருந்துப் பொருள்கள்

கொழும்பு, ஜூன் 2

இலங்கைக்கு 28 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகள் மற்றும் அத்தியாவசிய அறுவைசிகிச்சை உபகரணங்களை வழங்க சீன அரசாங்கம் முன்வந்துள்ளது. இதனை சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சந்திரகுப்த தெரிவித்தார்.

அதேவேளை ஜோர்தான் மற்றும் மலேசியாவில் செயற்படும் அமைப்பொன்று இலங்கைக்கு மருந்துகளை நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளது.

அத்துடன் பங்களாதேஷ் அரசாங்கத்தால் 2.2 மில்லியன் டொலர் பெறுமதியான அத்தியாவசிய மருந்துகளும் நன்கொடையாக நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 138 மருத்துவ அதிகாரிகள் வடமாகாணத்துக்கு நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

மத்திய சுகாதார அமைச்சால் உள்ளக பயிற்சியை நிறைவு செய்த 138 மருத்துவ அதிகாரிகள் வடமாகாணத்துக்கு நியமிக்கப்பட்டனர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கான நியமனம் கடந்த மே மாதம் 30 ஆம் திகதி முதல் வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் 133 மருத்துவ அதிகாரிகள் இதுவரை தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

இதற்கமைய யாழ்.மாவட்டத்துக்கு 23 மருத்துவ அதிகாரிகளும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு 22 மருத்துவ அதிகாரிகளும் வவுனியா மாவட்டத்துக்கு 22 மருத்துவ அதிகாரிகளும் மன்னார் மாவட்டத்துக்கு 35 மருத்துவ அதிகாரிகளும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 31 மருத்துவ அதிகாரிகளும் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-14-26)

## சங்காபிஷேகம்

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம் பதியுறை வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆலய மஹா சங்காபிஷேகம் நாளை காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. விஷேட பூசைகள், சங்காபிஷேக பூசைகள் இடம்பெறுவதுடன் இலங்கையின் புகழ் பூத்த நாதஸ்வர, தவில் வித்துவான்களின் விஷேட மேளக்கச்சேரியும் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-14)

## போதைக்கு அடிமையானதாலேயே மன்னார் இளைஞர்கள் உயிரிழப்பு

மன்னார், ஜூன் 2

மன்னாரில் கடந்த 30 ஆம் திகதி காரில் மர்மமான முறையில் உயிரிழந்த இளைஞர்கள் இருவர் மதுபானம் மற்றும் போதைப்பொருள் பயன்படுத்தியதால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாகவே உயிரிழந்துள்ளனர் என்று உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 30 ஆம் திகதி இரவு மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி காரில் நான்கு இளைஞர்கள் பயணித்தனர். அவர்களில் இருவர் அசைவற்ற நிலையில் காணப்பட்டனர். அதையடுத்து காரின் சாரதி இருவரையும் மன்னார் பொது மருத்துவ மனையில் சேர்த்துள்ளனர்.

எனினும் அவர்கள் ஏற்கனவே உயிரிழந்துவிட்டனர் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற உடற்கூற்றுப் பரிசோதனையிலேயே அவர்கள் மதுபானம், போதைப்பொருள் பயன்படுத்தியதால் ஏற்பட்ட ஒவ்வாமையால் உயிரிழந்தனர் என்று அறிக்கையிடப்பட்டது. அதன்பின்னர் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன என்று மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14)

## கரைச்சி பிரதேசத்தில் இன்று 8 மணித்தியாலம் நீர்வெட்டு

கிளிநொச்சி, ஜூன் 2

கரைச்சிப் பிரதேசத்தில் இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையான 8 மணித்தியாலங்கள் நீர்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி அலுவலகம் அறிவித்துள்ளது.

திருத்தம் மற்றும் பராமரிப்புப் பணிகள் காரணமாக இன்று மட்டும் இந்த நீர்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. எனவே தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குடிநீர் விநியோகத்தைப் பெற்று பயன்படுத்துகின்ற பொதுமக்கள் முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவித்துள்ளனர். (ஒ-14-214)

## 30 லீற். கசிப்புடன் இளைஞர் கைது!

சுன்னாகம்மேற்கு - ஊரெழுப் பகுதியில் 30 லீற்றர் கசிப்பை மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்ற இளைஞர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுன்னாகம் மேற்கு, ஊரெழுப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் கசிப்பு கொண்டு செல்லப்படுகிறது என கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் விசேட வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த நிலையிலேயே மேற்படி கசிப்பு மீட்கப்பட்டதுடன், சந்தேக நபரும் கைதுசெய்யப்பட்டார். சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 36 வயதான இளைஞரே கைதானவர். (ய-125)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

அளவெட்டி - கும்பழாவளை பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் 14 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஒ-14-63)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 2

குரும்பசிட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

10 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-14)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 2

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயிலின் வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் இரவு 7.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் 15 ஆம் திகதி புதன்கிழமை பூங்காவனமும் இடம்பெறவுள்ளது என்று ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (ஒ-14)

* * *

சாவகச்சேரி, ஜூன் 2

சாவகச்சேரி சப்பச்சிமாவடி பிள்ளையார் கோயில் மஹோற்சவம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 12 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 13 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 14 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஒ-14-9)

* * *

சாவகச்சேரி, ஜூன் 2

சரசாலை - நுணாவில் சிதம்பர விநாயகர் கோயில் மஹோற்சவம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 14 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (ஒ-14-9)

## சாவகச்சேரி – மண்டுவிலில் நடமாடும் அறவீட்டுச் சேவை

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வட்டாரங்களில் நடமாடும் அறவீட்டுச் சேவைகளை நகரசபையினர் ஆரம்பித்துள்ளனர்.

இதற்கமைய இன்று மண்டுவில் வட்டாரத்தில் நடமாடும் அறவீட்டுச் சேவை இடம்பெறவுள்ளது.

நிலுவைகள், சைக்கிள் உரிமக்கட்டணம், நாய்ப்பட்டி கட்டணம், வியாபார வரி ஆகியவற்றை இந்த நடமாடும் சேவையில் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த வரிகளை செலுத்தத் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இதேவேளை- நடமாடும் சேவையை எதிர்பார்க்காமல் வரியிறுப்பாளர்கள் நகரசபை அலுவலகத்தில் தமது ஆதனவரி, வியாபாரவரி, சைக்கிள் உரிமம், நாய்ப்பட்டி என்பவற்றை அலுவலக நேரத்தில் செலுத்தலாம் என்று நகரசபைத் தவிசாளர் அறிவித்துள்ளார். (ஒ-14-9)

## நிர்வாகத் தெரிவு

தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நேற்றுமுன்தினம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. நடப்பு வருட நிர்வாகிகளாக தலைவர் ரி.பிரேமதாசன், உப தலைவர் நா.கஜேந்திரன், செயலாளர் ச.பிரதீபன், உதவிச் செயலாளர். த.சுபா, பொருளாளர் க.தனேஸ்வரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ய-9)

## அலுவலர்கள் சுழற்சியில் கடமை பொதுமக்கள் சிரமம்

சாவகச்சேரி, ஜூன் 2

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர்கள் உள்ளிட்ட கள அலுவலர்கள் சுழற்சிமுறையில் ஒன்றுவிட்ட மறுநாள் கடமைக்குச் செல்வதால் பொதுமக்கள் கள அலுவலரைத் தேடிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தாம் சிரமத்தை எதிர்கொண்டுள்ளதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையைக் கருத்திற்கொண்டு அலுவலர்களை சுழற்சிமுறையில் கடமைக்கு அழைக்குமாறு அரசால் சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

இதனடிப்படையில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் அனைத்து அலகிலும் கடமையாற்றும் அலுவலர்கள் ஒன்றுவிட்ட மறுநாள் கடமைக்கு வர வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அலுவலர்கள் கடமையாற்றும் பிரிவில் வசிக்காத பலர் அவர்களைத் தேடிச்செல்ல வேண்டியுள்ளது என்றும் தெரிவித்தனர். (ஒ-14-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சுமையா? நிவாரணமா?

**695** பில்லியன் ரூபாவில் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த குறைநிரப்புப் பிரேரணைக்கு அனுமதி வழங்கியுள்ளது அமைச்சரவை. இந்த அனுமதியின் அடிப்படையில் பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணம் தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் மக்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டியது அவசியமானதுதான். இம்மியும் மாற்றுக் கருத்துக்கு இடமில்லாத தலையாய கடமை அது. ஆனால், அந்த நிவாரணம் எத்தகையது? அதனால் பொதுமக்களுக்கு சொல்லிக் கொள்ளும்படியான பயன்கள் உள்ளனவா? என்பதை உறுதிப்படுத்தவேண்டியது அரசாங்கத்தினதும் அதிகாரிகளினதும் முதன்மைப் பணி.

நாட்டில் இன்று வரலாறு காணாத 'டொலர் பஞ்சம்' நிலவுவது யாவரும் அறிந்ததே. டொலர் இல்லை என்பதைத்தான் நாம் பேசிக்கொண்டிருக்கின்றோம். ஆனால், டொலருடன் இணைந்த வகையில் சீரான நாணயச் சுழற்சியையும் இலங்கை இழந்து பல காலம். ரூபாவின் சுழற்சிகூட இலங்கைக்குள் இல்லாமல் போய்க்கொண்டிருக்கின்றது என்பதுதான் உண்மை. இதனால்தான், பொதுமக்களுக்கு மாதாந்தம் வழங்கும் நிதியுதவிகள் முதற்கொண்டு அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் வரையில் எதை வழங்குவதாக இருந்தாலும் பணத்தைத் தினம்தினம் அச்சிடும் நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டிருக்கின்றது.

அரச உத்தியோகத்தர்களின் ஊதியத்துக்காக ரூபாவை அச்சிடும் நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளதென்றால், நிவாரணத்துக்காக ஒதுக்கப்படும் 695 பில்லியன் ரூபா எங்கிருந்து வந்தது? என்ற கேள்வி இங்கே எழுவது தவிர்க்கமுடியாததல்லவா!. பாதுகாப்புத்துறை, பௌத்த மத விவகாரம், தொல்லியல் துறை உள்ளிட்ட அமைச்சுக்கள் விழுங்கிக் கொண்டிருக்கும் பல பில்லியன்களை வெட்டிக்குறைத்து, அந்த ஒதுக்கீடுகள் பொதுமக்களுக்கு நிவாரணமாக வழங்கப்படும் என்றால் அது இருகரம்கூப்பி வரவேற்கத்தக்க விடயம்தான். ஆனால், அத்தகைய துணிவும் முதுகெலும்புத்தனமும் இந்த அரசாங்கத்துக்கு வருமா என்பது சந்தேகம்தான். ஏனெனில், கோத்தாபய அரசாங்கத்தின் வாக்குவங்கிகளே இராணுவமும், பௌத்தமும்தானே.

இப்படியானதொரு நிலையில், மீண்டும் கட்டுக்கட்டாக நோட்டுக்களை அச்சடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு அரசாங்கம் தள்ளப்படும். அரசாங்கத்தின் முன்னுள்ள ஒரேயொரு தெரிவும் அதுதான். ரூபாவின் சுழற்சி இல்லாமல் புதிது புதிதாக அச்சிட்டு வெளித்தள்ளப்படும் 'காகிதக் குப்பைகளால்' வழங்கப்படும் இழப்பீட்டால் ஏது பயன்?


அரிசி, சீனி என்பவற்றின் விலைகளில் 10 ரூபாவைக் குறைத்துக்காட்டத் திராணியற்ற அரசாங்கம் நிவாரணம் வழங்குவதற்காக பல பில்லியன்களில் நிதியை ஒதுக்குகின்றது. ரூபாவை அச்சிட்டுத்தான் நிவாரணம் வழங்க வேண்டிய நிலைமை என்றால் அதற்கு அரசாங்கம் எதற்கு? அமைச்சரவை எதற்கு? நிபுணர்கள் குழாம் எதற்கு? இனி இந்தப் பெருந்தொகை நிதியும் சுழற்சி இன்றித் தேங்கும். சுழற்சி இல்லாத காகிதங்கள் ரூபாவின் பெறுமதியை வெகுவாகவே இழக்க வைக்கும்.

உண்மையில் அரசாங்கம் செய்ய வேண்டியது சர்வதேச வர்த்தகத்தைப் பலப்படுத்தி ரூபாவுக்குச் சீரான சுழற்சியைத் தேடுவதே. அதைவிடுத்து மேற்கொள்ளப்படும் இந்தக் கண்துடைப்பு நடவடிக்கைகளெல்லாம் உண்மையில் மக்களுக்குச் சுமையே அன்றி நிவாரணமல்ல.

(ஓ-அ-ஓ)

நாளொரு நல்வார்த்தை

"நாளைய தினத்தைக் குறித்துக் கவலைப்படாதே; இன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள உழை" -மூர்



அதிகளவான சிறுவர்களுக்கு

# உணவுத் தட்டுப்பாட்டால் ஊட்டச்சத்துக் குறைபாடு

### குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 2**



**நாட்டில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள உணவுத் தட்டுப்பாட்டால் சிறுவர்கள் மத்தியில் ஊட்டச்சத்துக் குறைபாடு அதிகரித்துள்ளது என கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மருத்துவமனையில் கடந்த சில நாள்களாக அனுமதிக்கப்பட்ட 53 குழந்தைகளில் 11 பேர் ஊட்டச்சத்துக் குறைபாடுடையவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் நால்வருக்கு அதிக ஊட்டச்சத்து குறைபாடு காணப்படுகிறது. அந்தக் குழந்தைகளுக்கு விசேட ஊட்டச்சத்து உணவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நீரிழிவு நோயால் பாதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. அண்மைய நாள்களில் 100க்கும் அதிகமான சிறுவர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என பதிவாகியுள்ளது. ஆகவே குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய பெற்றோர் வீட்டுத்தோட்டச் செய்கையில் அதிக கவனம் செலுத்தவேண்டும். குறுகிய காலத்தில் சத்து மிக்க உணவு வகைகளை பயிரிடவேண்டும் - என்றார். (ச-இ)

# விவசாயச் செய்கையை விரைந்து பரவலாக்குக!

### உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரும் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 2

நாட்டில் பொருளாதார நெருக்கடி மிகையாக அதிகரித்து வருகின்றது. இதனால் நடைமுறைக்குச் சாத்தியமான அத்தனை இடங்களிலும் விவசாயம் செய்வதற்கு அனைவரும் நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்று தெரிவித்தார் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்ன.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய சூழ்நிலையில், அரச சேவையை, இணைய வழி அரச சேவையாக மாற்ற வேண்டிய அவசியம் உள்ளது. காகிதப் பயன்பாட்டை மட்டுப்படுத்த இந்த இணையவழி தொழில்நுட்பம் முக்கியமானது. இந்த நேரத்தில் நாட்டுக்காக ஒரு டொலரையேனும் சேமிப்பதற்கு அனைத்து பிரஜைகளும் உறுதியாக இருக்க வேண்டும்.

அத்துடன், நாட்டில் காணப்படுகின்ற எரிபொருள் நெருக்கடியால் எதிர்காலத்தில் உணவுப் பொருள்களிலும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. ஒவ்வொரு வீட்டுத் தோட்டத்திலும், பொது நிலங்களிலும், வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான காணிகளிலும் பயிரிடுவதற்கான வேலைத்திட்டத்தை மாவட்டச் செயலர்கள் உடனடியாக வகுக்க வேண்டும் - என்றார். (ம)


இன்று

03.06.2022
வெள்ளிக்கிழமை
வைகாசி 20

சுபநேரம் : 05.52 - 07.22
ராகுகாலம்: 10.22 - 11.52
சதுர்த்தி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















# 60 குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 2

காரைநகரில் பொருண்மியம் நலிந்த 60 குடும்பங்களுக்கு உலர்உணவுப் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

தமிழரசுக் கட்சியின் ஊர்காவற்றுறைத் தொகுதி செயலாளரும் வேலணைப் பிரதேச சபை உறுப்பினருமான கருணாகரன் நாவலனின் ஏற்பாட்டில் சிவப்பிரகாசம் புவனேஸ்வரியின் முதலாம் ஆண்டு நினைவாக அவரது குடும்பத்தின் நிதியுதவியில் இந்த உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் கனடா கிளை உபதலைவர் அகிலன் முத்துக்குமாரசுவாமி, காரைநகர் பிரதேசசபை உறுப்பினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஒ-14)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### மின்சாரம்...

மாக உயிரிழந்துள்ளார்.

முழங்காவில், வெள்ளாங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. அன்ரன் ஜினேசன் ஜினேஜினி (வயது-4) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மின் தாக்கியதில் சிறுமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சிறுமியின் உடல் கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-113)

### நீரில்...

உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா பொது மருத்துவமனையில் நேற்று முன்னெடுக்கப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில் இந்த விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படவில்லை என்பதும் உடற்கூற்றுப் பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வவுனியா பொது மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.

கணேசபுரம் 8 ஆம் ஒழுங்கையில் 16 வயது மாணவி ராசேந்திரன் யதுர்சி கடந்த திங்கட்கிழமை மாலை மேலதிக வகுப்புக்குச் சென்று வீடு திரும்பாததையடுத்து, உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட தேடுதலின் போது மாணவியின் சடலம் அந்தப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து மீட்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-100)

# மாணவர்கள் கௌரவிப்பு

கொடிகாமம், ஜூன் 2

கொடிகாமம் - கச்சாய் வீதியில் உள்ள ஒட்டங்கேணி சனசமூக நிலையத்தை அண்டிய பகுதிகளில் வசிக்கும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்று சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு ஒட்டங்கேணி சனசமூக நிலையத்தின் தலைவர் பு.உசாந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் 2021 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் பதக்கம் அணிவித்து சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன், அமரர் சுப்பிரமணியம் மங்கையர்க்கரசியின் ஞாபகார்த்தமாக கச்சாய் அன்னை திரேசா முன்பள்ளிக்கு 20 ஆயிரம் ரூபா நிதியை கந்தையா திருநாவுக்கரசு முன்பள்ளி ஆசிரியரிடம் வழங்கிவைத்தார். (ய-159)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
திரு. மாசிலாமணி சுகந்தன்




ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம். ஸ்ரீ காமாட்சி அம்பாள் சனசமூக நிலையத்தின் செயலாளரும் KMAS Engineering Contractors நிறுவனத்தின் இயக்குநருமாகிய திரு. மாசிலாமணி சுகந்தன் அவர்கள் 26.05.2022 அன்று மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் **அகில இலங்கை சமாதான நீதிவானாக** சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவரை இவரது சமூகப்பணி மென்மேலும் சிறந்து வளர வாழ்த்துகின்றோம்.

**நிர்வாகம்**
**ஸ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ்தானம்**
**தாவடி கிழக்கு, கொக்குவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** ஈடுபடும் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். பொருள் சேர்க்கை உண்டாகும். ஆதாயமான நாள். எதிர்பாராத லாபம் உண்டாகும். பணவரவால் முயற்சியில் இருந்த தடை விலகும்.

**இடபம்:** கவனமுடன் செயற்பட வேண்டிய நாள். புதிய முதலீட்டை தவிர்க்கவும். பேச்சில் கவனம் தேவை. எண்ணங்களில் ஒன்று நிறைவேறும். வரவு – செலவில் கவனம் தேவை.

**மிதுனம்:** நெருக்கடியை சமாளித்து வெல்வீர்கள். மகிழ்ச்சி நிலவும். மனதில் புதிய சிந்தனை மேலோங்கும். மனதில் இருந்த அழுத்தம் குறையும். விரும்பியதை அடைந்து மகிழ்வீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத செலவு உண்டாகும். பயணம், பண விடயத்தில் எச்சரிக்கையும் கவனமும் தேவை. வழக்கு முடிவு உங்களுக்கு சாதகமாகும். அரசு வழியில் நன்மை ஏற்படும்.

**சிம்மம்:** வருமானத்தில் இருந்த தடை விலகும். உங்களுடைய முயற்சிகளில் வெற்றி உண்டாகும். லாபமான நாள். வராமல் இருந்த பணம் உங்கள் கைக்கு வரும். தொழிலில் இருந்த சங்கடம் விலகும்.

**கன்னி:** தொழிலை விரிவு செய்வீர்கள். பணியாளர்கள் பாராட்டுப் பெறுவர். உழைப்புக்கு மரியாதை உண்டாகும். தொழிலில் இருந்த தடைகளை சரி செய்வீர்கள். முயற்சிகள் வெற்றியாகும்.

**துலாம்:** முயற்சிகளில் இழுபறி உண்டாகும். அரசு வழியில் பிரச்சினைகள் உருவாகும். எச்சரிக்கை அவசியம். உங்கள் எதிர்பார்ப்பு தள்ளிப் போகும். செயல்களில் எச்சரிக்கை தேவை.

**விருச்சிகம்:** எதிர்பார்த்தவற்றில் இழுபறியே இருக்கும். பயணத்தில் கவனமும் எச்சரிக்கையும் தேவை. வீண் பிரச்சினைகளில் ஈடுபட வேண்டாம். எதிர்பார்த்த நன்மை உண்டாகாமல் போகும்.

**தனுசு:** கணவன் – மனைவிக்குள் பிரச்சினை தீரும். குடும்பத்தினரின் தேவை நிறைவேறும். மகிழ்ச்சியான நாள். நண்பர் உதவி கிடைக்கும். எதிர்பார்த்த வருவாய் வரும்.

**மகரம்:** முயற்சியில் இருந்த தடை விலகும். விரோதிகள் விலகிச் செல்வர். வரவுகள் கூடும். வழக்கத்தைவிட செயலில் வேகம் இருக்கும். நிறைவேறாத எண்ணம் இன்று நிறைவேறும்.

**கும்பம்:** முயற்சியில் தடையைச் சந்திப்பீர்கள். பிள்ளைகளின் வழியில் ஆடம்பரச் செலவு கூடும். பணத்தேவை அதிகரிக்கும். முயற்சி நிறைவேறாமல் போகும். பணவரவில் தடை ஏற்படலாம்.

**மீனம்:** அலைச்சல் அதிகரிக்கும். வேலை, தொழில் காரணமாக சிலர் வெளியூர் செல்வர். எதிர்பாராத வேலையால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். முயற்சியில் தடைகளை சந்திப்பீர்கள்.

# கர்ப்பிணி மீது துப்பாக்கிச் சூடு

## அமெரிக்காவில் மிருகத்தனம்



நியூயோர்க், ஜூன் 2

அமெரிக்காவில் கர்ப்பிணி பெண் ஒருவர் மீது அந்தநாட்டுப் பொலிஸார் நடுவீதியில் துப்பாக்கிச்சூடு நடத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவிலுள்ள கன்சாஸ் நகரில் சிலர் ஆயுதங்களுடன் கார் ஒன்றைக் கடத்திச் செல்வதாக கிடைத்த தகவலை அடுத்து குறித்த காரை துரத்திச் சென்ற பொலிஸார் காரை மடக்கிப் பிடித்துள்ளனர்.

அதன்போது கார்ச் சாரதி தப்பியோடியுள்ளார். காரிலிருந்து பெண் ஒருவர் இறங்கியபோது தரையில் படுக்குமாறு கூறியுள்ளனர்.

அதற்கு குறித்த பெண் தான் கர்ப்பமாக இருப்பதாகக் கூறி தன்னால் குப்புறப் படுக்க முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

எனினும் அவரைத் தரையில் படுக்குமாறு திரும்பத் திரும்ப கூறியும் கேட்காததால் அந்தப் பெண்ணை ஐந்துமுறை துப்பாக்கியால் சுட்டுள்ளனர். அத்துடன் இரத்தவெள்ளத்தில் கிடந்த அந்தப் பெண்ணைக் கைவிலங்கிட்டு கைதுசெய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான அந்தப் பெண் 26 வயதுடைய கறுப்பினப்பெண் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் இந்தப் பயங்கர சம்பவத்தில் ஈடுபட்ட அந்தப் பொலிஸார் இருவரும் நிர்வாக விடுப்பில் அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் சம்பந்தப்பட்ட பொலிஸாருடன் தொடர்பில்லாத ஒரு அதிகாரியிடம் விசாரணை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# 2,500 ஆண்டுகள் பழமையான மம்மிக்கள் எகிப்தில் கண்டெடுப்பு

கெய்ரோ, ஜூன் 2

எகிப்தில் கிறிஸ்துவுக்கு 500 ஆண்டுகள் முன்னைய பழமைவாய்ந்த மம்மிக்கள் அடங்கிய சவப்பெட்டிகள் மற்றும் கடவுள்களின் சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

எகிப்தின் தொல்லியலாளர்கள் தொடர்ந்து பிரமிடுகளைக் கண்டறியும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், அண்மையில் தொல்லியலாளர்கள் குழுவினர் ஒன்று சக்காராவில் இருந்து புதிய சவப்பெட்டி புதையலைக் கண்டெடுத்துள்ளனர்.

இவை 2ஆயிரத்து 500 ஆண்டுகள் பழமையானவை என நம்பப்படுகிறது.

நூற்றுக்கணக்கான பழங்கால எகிப்து கடவுள்களின் சிலைகளும் இதன்போது கண்டெடுக்கப்பட்டுள்ளன. (ச-இ)

# தொலைதூர ஏவுகணைகள் உக்ரைனுக்கு வழங்கப்படும்

## அமெரிக்கா அறிவிப்பு

கீவ், ஜூன் 2

உக்ரைனுக்கு நீண்டதூர இலக்கைத் தாக்கி அழிக்கும் ஏவுகணைகளை வழங்க அமெரிக்கா ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதனை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யாவின் படையெடுப்பு 100 ஆவது நாளை எட்டிய நிலையில், உக்ரைனுக்கு 700 மில்லியன் டொலர் மதிப்பிலான ஆயுத தொகுப்பை அமெரிக்கா வழங்கவுள்ளது.

ரஷ்யாவுக்குள் ஏவுகணைகளைப் பயன்படுத்த மாட்டோம் என உக்ரைன் உறுதியளித்ததை அடுத்தே ரஷ்யாவின் எல்லைகளை தாக்கி அழிக்கக் கூடிய தொலைதூர ஏவுகணைகளை அமெரிக்கா வழங்க முடிவு செய்துள்ளது.

இதேவேளை ரஷ்யப் பகுதிகளை தாக்கி அழிக்கும் வகையிலான ஏவுகணைகளை உக்ரைனுக்கு வழங்கப்போவதில்லை என அமெரிக்க அதிபர் பைடன் நேற்றுமுன்தினம் அறிவிப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# ஷங்காயில் ஊரடங்கு கட்டுப்பாட்டுடன் தளர்வு

ஷாங்காய், ஜூன் 2

சீனாவின் தலைநகரான ஷங்காயில் இரண்டு மாதங்கள் தொடர் நடைமுறையில் இருந்த ஊரடங்கு கட்டுப்பாடுகளுடன் விலக்கப்பட்டுள்ளது என சீன அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நேற்றுமுன்தினம் பொதுப் போக்குவரத்து மீண்டும் ஆரம்பமாகி மக்கள் தமது அன்றாடப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் பொதுப்போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்கள் ஒவ்வொரு 72 மணிநேரத்துக்கு ஒருமுறை கொரோனாப் பரிசோதனை செய்து முடிவுகள் பெற்றிருக்க வேண்டும் எனவும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டால் அவர்களுடன் அவர்களின் நெருங்கிய தொடர்புகளுக்கும் கடுமையான தனிமைப்படுத்தல் விதிமுறைகள் செயற்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பிரபல பின்னணி பாடகர் கேகே மாரடைப்பால் திடீர் மறைவு

சென்னை, ஜூன் 2

பிரபல பின்னணிப் பாடகர் கேகே கொல்கத்தாவில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியில் பங்கேற்ற நிலையில் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியத் திரையுலகின் பல்மொழி பாடகர்களில் ஒருவரான கேரளாவை சேர்ந்த 53 வயதான கேகே என்று அழைக்கப்படுபவர் பாடகர் கிருஷ்ணகுமார் குன்னத்.

இவர் ஹிந்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் பெங்காலி உள்ளிட்ட பல மொழிகளில் பாடல்களைப் பாடியுள்ளார்.

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் 1997 ஆம் ஆண்டு வெளியான மின்சாரக் கனவு படத்தில் இடம்பெற்ற 'ஸ்ட்ராபெர்ரி கண்ணே..' பாடல் மூலம் தமிழில் கேகே அறிமுகமானார்.


தொடர்ந்து [illegible] வித்யாசாகர், [illegible] ஹாரிஸ் ஜெயராஜ் உள்ளிட்டோர் இசையிலும் தமிழில் அவர் பாடியுள்ளார்.

இவரின் பாடல்களில் காதல் வளர்த்தேன் (மன்மதன்), அப்படி போடு (கில்லி), காதலிக்கும் ஆசை (செல்லமே), நினைத்து நினைத்து (7ஜி ரெயின்போ காலனி), உயிரின் உயிரே (காக்க காக்க) உள்ளிட்ட பாடல்கள் பிரபலமானவையாகும்.

இந்த நிலையில் பாடகர் கேகே மறை[illegible] அரசு துணைத் தலை[illegible] வேறு தரப்பினரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(17.06.2021 மற்றும் 18.06.2021ஆம் திகதிகளில் உதயனில் பிரசுரமான இந்தக் கட்டுரை, காலத்தின் அவசியம் கருதி மீள்பிரசுமாகின்றது.)

# யாழ்.குடாநாட்டில் டெங்குநோய்ப் பரவலில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளின் தாக்கம்

**சின்னத்தம்பி நோபிள் சுரேந்திரன், கோகிலா சிவபாலகிருஷ்ணன்**
விலங்கியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்

**யாழ் குடாநாட்டில் டெங்குத் தொற்று மற்றும் நுளம்பு நோய்க்காவிகளின் பரவல்**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இலங்கையில் டெங்கு நோய்த் தாக்கம் இருந்தபோதும், 1990 களில் டெங்கு வைரசின் நான்கு செரோடைப்கள் (DEN1 DEN4) இலங்கையில் கண்டறியப்பட்டதுடன் டெங்கு நோய்ப் பரவலும் அதிகரித்துள்ளது. யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரை டெங்கு நோய்க்காவியான ஈடிஸ் நுளம்புகளின் பரவல் நீண்ட காலமாக பதிவாகியிருப்பினும், 2009 க்கு முன்னர் இங்கு டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது, 2008 இல் 58 தொற்றாளர்கள் மட்டுமே பதிவாகியுள்ளனர். இதனால் டெங்கு வைரஸின் சுழற்சியும் குறைவாக காணப்பட்டது. வடக்கு கிழக்கில் மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற உள்நாட்டுப் போர், யாழ் குடாநாட்டுக்கும் ஆனையிறவூடான நாட்டின் ஏனைய பகுதிகளுக்குமான மக்களின் சுதந்திரமான பயணத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

மே மாதம் 2009 இல் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து A9 பாதை திறக்கப்பட்டதும் யாழ் குடாநாட்டில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் படிப்படியான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. 2009 மற்றும் 2010 இல் முறையே 422 மற்றும் 2648 நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் முன்பு எப்போதுமில்லாத வகையில் நான்கு செரோடைப்களின் புழக்கத்துடனான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையின் சடுதியான அதிகரிப்புக்கு யாழ் குடாநாட்டுக்கு உள்ளேயும் வெளியேயுமான சுதந்திரமான மக்கள் போக்குவரத்தே காரணமாக அமைந்தது. வேறு பல நாடுகளிலும் இவ்வாறான நிகழ்வுகள் பதிவாகியுள்ளன.

யாழ் குடாநாட்டில் டெங்கு நோய் பரவுதல் பருவகாலத்துடன் தொடர்புடையது. செப்ரெம்பர் மற்றும் பெப்ரவரி மாதங்களுக்கு இடையில் வரும் பருவ மழை காலத்தில் கூடியளவான நோய்த் தொற்று காணப்படும். மழை வீழ்ச்சி மற்றும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு இடையே ஒரு நேர்மறையான தொடர்பு இருப்பதுடன் முந்தைய மாதத்தின் மழைவீழ்ச்சிக்கும் நுளம்பு குடம்பிகளின் பெருக்கத்துக்கும் இடையே கணிசமாக தொடர்பு அவதானிக்கப்பட்டுள்ளது.




படம் 1: 2017 மே 2021 காலப்பகுதியில் யாழ் குடாநாட்டில் பதிவாகியுள்ள டெங்கு தொற்றாளர்கள்

யாழ்.குடாநாட்டில் முறையே 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மொத்தம் 8 ஆயிரத்து 261 மற்றும் 2 ஆயிரத்து 157 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் (படம்-1) அத்துடன் மே 2021 வரை 105 தொற்றாளர்கள் மட்டுமே இனங்காணப்படுள்ளனர்.

**கொரோனாத் தொற்று பரவலும் நாடு முடக்கமும்**

நாட்டில் முதலாவது கொவிட் 19 நோயாளி 2020 ஜனவரியில் இனங்காணப்பட்டதுடன் முதலாவது கொவிட் 19 தொற்றுக்குள்ளான இலங்கை பிரஜை 2020 மார்ச் மாத தொடக்கத்தில் அடையாளங் காணப்பட்டார். அதன் பின்னர் உறுதிப்படுத்தப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை 2020 மார்ச் இறுதிக்குள் 122 ஆக உயர்ந்தது. யாழ். மாவட்டத்தில் முதலாவது கொவிட் 19 தொற்றாளர் 22 மார்ச் 2020 இல் இனங்காணப்பட்டார். இந்நிலையில் கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன்




2020 மார்ச் 20 முதல் ஒரு மாதத்துக்கு மாவட்டங்களுக்கு இடையிலான பயணத்தடையுடன் கூடிய நாடளாவிய பொது முடக்கம் அமுல்ப்படுத்தப்பட்டது. பின்னர் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி மற்றும் புத்தளம் ஆகிய மக்கள் அடர்த்தியாக வாழ்கின்ற மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் மே 11, 2020 முதல் பகுதியளவிலான அரசாங்க நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால் பாடசாலைகள் குறிப்பிட்ட சில தரங்களைத் தவிர ஏனையவற்றிற்கும், பல்கலைக்கழகங்கள் உட்பட அனைத்து கல்விசார் நிறுவனங்களும் தொடர்ந்து மூடப்பட்டிருந்தன. பொது முடக்கம் மற்றும் மாவட்டங்களுக்கு இடையேயான பயணக்கட்டுப்பாடுகள் 2020 ஜூன் மாத இறுதியில் இருந்து முற்றிலுமாக நீக்கப்பட்டு, மேற்கு மாகாணத்தைத் தவிர அனைத்து பாடசாலைகளும் 2021 ஜனவரி 11 முதல் கற்பித்தல் மற்றும் கற்றல் நடவடிக்கைகளுக்காகத் திறக்கப்பட்டன.

2020 ஆம் ஆண்டில் முறையே 42 ஆயிரத்து 702 மற்றும் 122 கொவிட் 19 தொற்றாளர் தேசிய அளவிலும், யாழ் மாவட்டத்திலும் பதிவாகியுள்ளனர், அதேசமயம் இந்த எண்ணிக்கை 2021 ஏப்ரல் இறுதிக்குள் முறையே 63 ஆயிரத்து 782 மற்றும் ஆயிரத்து 304 ஆக உயர்ந்துள்ளது.

**யாழ் குடாநாட்டில் டெங்கு நோய் பரவுதலில் முடக்கம் மற்றும் பயணக்கட்டுப்பாடுளின் தாக்கம்**

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் உலக நாடுகள் முடக்கம் மற்றும் சமூக இடைவெளி பேணும் விதிமுறைகளை அமுலாக்குவதன் மூலம் பொதுமக்களின் நடமாட்டத்துக்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தன. இதற்கு இலங்கையும்

> அமுல்படுத்தப்பட்ட முடக்க அலையானது, மனித தொடர்பு விகிதங்கள், நோய் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்கள் பூகோளரீதியிலான இயற்கை பரிசோதனையில் டெங்கு வைரசின் பரவலை எவ்வாறு பாதிக்கிறன என்பதைக் காண ஒரு தனித்துவமான வாய்ப்பை அளித்துள்ளது.

விதிவிலக்கல்ல, தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்த சமயத்தில் பகுதியளவான மற்றும் நாடு தழுவிய முடக்கல் செயற்பாட்டை முன்னெடுத்தது, கொரோனாக் கொத்தணியின் உருவாக்கத்தின் அடிப்படையில் முடக்கலுக்கான நேரம் மற்றும் அமுல்படுத்தப்படும் பகுதியில் வேறுபாடு காணப்பட்டது.

எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்டது போல இவ்வாறான முடக்கங்கள் உலக நாடுகளின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளபோதிலும் சில நன்மைகளும் நிகழ்ந்துள்ளன.

இந்த முடக்கங்களின் இணை விளைவுகள், பல்வேறுபட்ட மனிதர்களுக்கிடையேயான தொடர்பு விகிதங்களை அதிகம் சார்ந்துள்ள தொற்று நோய்களின் பரவல் இயக்கவியலில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். நாட்டுக்கு நாடு மாறுபடும் முடக்கங்களின் நேரம், காலம் மற்றும் தீவிரத்துடன் கூடிய 2020 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட முடக்க அலையானது, மனித தொடர்பு விகிதங்கள், நோய் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்கள் பூகோள ரீதியிலான இயற்கை பரிசோதனையில் டெங்கு வைரஸின் பரவலை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைக் காண ஒரு தனித்துவமான வாய்ப்பை அளித்துள்ளது.

(மிகுதி நாளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சை விடைத்தாள்கள் மழையில் நனைந்து நாசம்

## மாணவர்களுக்கு நியாயம் வழங்க ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 2

நாட்டில் நேற்றுமுன்தினம் நிலவிய சீரற்ற காலநிலையால் நடைபெற்று முடிந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கினர் என ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவிக்கையில்,

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையால் மாண வர்களின் பரீட்சை விடைத்தாள்கள் மழையில் நனைந்துள்ளன. அத்துடன் மாணவர்களின் கலைப்படைப்புக்கள் உலராது காணப்பட்டன. இதனால் பல மாணவர்கள் பரீட்சையில் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். இதனைக் கருத்திற்கொண்டு நியாயமான தீர்வை வழங்கவேண்டும். இதுதொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என அவர் தெரி வித்தார். (ச-இ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 06 . 03 . 1947

மறைவு 31 . 05 . 2022

### திருமதி மதனகல்யாணி பொன்னம்பலம்

கேரதீவு வீதி நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மதனகல்யாணி பொன்னம்பலம் (31.05.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், இரத்தினம் தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான தம்பையா, அன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மகேந்திரராசா, தருமராசா, இரவீந்திரன், கணேசமூர்த்தி மற்றும் கோசலர், ஜீவகாருண்யமூர்த்தி, குணசுந்தரி, தயாநிதி ஆகியோரின் பாசமிகு அன்புச் சகோதரியும் கௌசல்யாதேவி (கனடா), சரவணபவன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கோபிராஜ் (கனடா), சக்தி (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சரணா, சரண் (இத்தாலி) ஆகியோரின் அப்பம்மாவும், சாய்குருவின் (கனடா) பா்சமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2022) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு அறியத்தருகின்றோம்.

கேரதீவு,
நாவற்குழி.

தகவல்:
குடும்பத்தினர்
077 723 8628,076 466 0094

கட்டுநாயக்க விமான நிலையம்:

### புறப்பாடு முனையத்திலிருந்து அதிகமானோர் வெளியேற்றம்

கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்பாடு முனையம் பரபரப்பாக இயங்குவதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். வெளி நாட்டு வேலைவாய்ப்பு மற்றும் கற்றல் நடவடிக்கை ளுக்காக கடந்த சில நாள்களாக அதிகளவானோர் வெளிநாடுகளுக்குச் செல்வதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளுக்குச் வேலைவாய்ப்புக்காகச் செல் பவர்களுக்கு அரசாங்கம் அதிக வசதிகளை ஏற்படுத்தி கொடுத்துள்ளது. இந்த நிலையில்

நாளொன்றுக்கு நூற் றுக்கணக்கானவர்கள் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக பயணத்தை மேற் கொண்டுவருகின்றனர் என அதிகாரிகளால் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் உயர்திரு

### முத்துக்குமாரு கனகலிங்கம்

மறைவு: 02.06.2021

எம் அருமை அப்பா!
அன்பாலும் பண்பாலும் நல்லோர் மனங்கவர்ந்தீர்
நல்வாழ்வு வாழ அயராது பாடுபட்டீர்
கல்வியில் நாம் உயர கருத்தாய் எமைக்காத்தீர்
உற்றார் உறவினர் நண்பர்களுக்கு இனியவராய் நீர் வாழ்ந்தீர்
வாழ்ந்து எமை விட்டுப் பிரிந்து ஒரு ஆண்டு மறைந்ததப்பா
ஆறிடுமோ எம் துயர் அழுகின்றோம் அப்பா
உங்கள் ஆன்மா சாந்தியடைய
இகபரனை இறைஞ்சுகிறோம் அப்பா.

நித்தம் உங்கள் நினைவுகளோடு
மனைவி, பிள்ளைகள்.

(cs.44758) (2.6)

## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



தோற்றம் 23 . 05 . 1937

மறைவு 03 . 05 . 2022

### அமரர் முத்தையா செல்லத்துரை

திதி: திருதியை

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (02.06.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, அதனைத் தொடர்ந்து மதியபோசனமும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து இந்நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

230, கண்டி வீதி,
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

சந்திரவதனி (மகள்)

(CS 11004) 1-6

## மரண அறிவித்தல்



### திருமதி சிவவாகீசர் உமாதேவி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் தொல்புரம் மேற்கு சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.சிவவாகீசர் உமாதேவி நேற்று (01.06.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு சிதம்பரம் தம்பதிகளின் மூத்த புதல்வியும் சுப்பிரமணியம் சிவவாகீசரின் (முன்னாள் அதிபர் யா/திருஞான சம்பந்த வித்தியாலயம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் திலகவதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான இராமநாதன் (முன்னைநாள் மேலதிக அரசாங்க அதிபர்), அருணாசலம், நவமணிதேவி மற்றும் கனகாம்பிகையின் அன்புச் சகோதரியும் சிவகுமாரன் (UK), சிவயோகன் (UK), தயாநிதி (ஆசிரியை மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயரும் மகாலட்சுமி (UK), செல்வநாயகி (UK), சிறீறங்கநாதன் (வருகைதரு விரிவுரையாளர் - தொழில்நுட்பவியல் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும் தனுசியா (UK - Scientist), மயூரன் (UK), ஜீவன் (UK), அன்வின் (UK), விந்துஜன் ஆகியோரின் பாட்டியும் குமுதினி (UK), கருணா கரன் (UK), தயாளினி (தலைவர் - சித்தமருத்துவ அலகு யாழ். பல்கலைக்கழகம்), சுதர்சினி (கொழும்பு), சொரூபினி (Australia) ஆகியோரின் மாமியாரும் Dr.திவாகரன் (நரம்பியல் நிபுணர்), உவர்ணா (கொழும்பு), இந்திராதேவி (UK) ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.06.2022) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மூளாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 20.03.1956

### சிவனேசன் சோதிமலர்

மறைவு 31.05.2022



கரவெட்டி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவனேசன் சோதிமலர் (மாமனிதர் சிவனேசன் அறக்கட்டளை நிறுவுனர்) அவர்கள் 31.05.2022 அன்று பி.ப 7.30 மணியளவில் இறைபதமெய்தினார்.

அன்னார் அமரர்களான சின்னத்துரை சின்னம்மா தம்பதியரின் சிரேஸ்ர புத்திரியும், அமரர்களான கிட்டினன் ஆழ்வியம்மா தம்பதியரின் மருமகளும், மாமனிதர் கி.சிவனேசன் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், பொது முகாமையாளர் வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் பேரிணையம்) அவர் களின் அன்பு மனைவியும், திருக்குமார், கோபாலகுமார், தாட்சாயனி, தருக்ஷனி ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர் சோதிதாஸ் மற்றும் முரளிதாஸ் கோகிலாமலர், கமலதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், குலசேகரன், கருணாகரன், விஜயலட்சுமி, தனலட்சுமி, விஜி, மனோகரன், சுசிகலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


021 226 4145

தகவல் : குடும்பத்தினர்.

(CR 8500 B) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



உரும்பிராய் ஓடையம்பதி

# கற்பக விநாயகர் ஆலயம்

## புனராவர்த்தன சப்த தச (17) குண்ட பக்ஷ

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபன சிறப்பிதழ் - 2022

**எண்ணெய்க்காப்பு**
இன்று (02.06.2022) வியாழக் கிழமை காலை 7.00 முதல் மாலை 6.00 வரை

வாக்குண்டாம் நல்லமனமுண்டாம் மாமலரால்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

திருச்சிற்றம்பலம்

**மஹாகும்பாபிஷேகம்**
நாளை (03.06.2022) வெள்ளிக் கிழமை காலை 6.45 முதல் காலை 8.30 வரை

**விநாயக அடியார்களே!**

சிவபூமி என பெரியோர்களால் போற்றி புகழ்பெறும் இலங்கை திருநாட்டில் வடபால் சைவ பாரம்பரியமும் தமிழ்க்கலாசாரமும் வளர்ந் தோங்கும் யாழ்ப்பாணம் நகரில் தர்மசிந்தையும் இறைபக்தியும் நிறைந்த சைவாசார சீலர்கள் நிறைந்து வாழும் உரும்பிராய் ஓடையம்பதி பகுதியில் பல காலமாக வீற்றிருந்து அருள்பாலித்து வரும் கற்பக விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மங்கல மிகு சுபகிருது வருட வைகாசி மாதம் 20 ஆம் நாள் (03.06.2022) வெள்ளிக்கிழமை புனர்பூச நட்சத்திரத்திரமும் சதுர்த்தித் திதியும் சித்தயோகமும் கூடிய் காலை 6.45 மணி முதல் 8.30 மணி வரை உள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. அந்நேரமும் அதன் பின்னரும் நடைபெறும் கிரியா காலங்களிலும் வந்து கலந்து விநாயகரின் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

### கிரியாகால நிகழ்வுகள்

**இன்று 02.06.2022 வியாழக்கிழமை காலை 8.00 மணி முதல்** விநாயகர் வழிபாடு, விஷேட சந்தி, எண்ணெய்க்காப்பு, யாக பூஜை, ஹோமம், பாவனாபிஷேகம், சர்வாஞ்சலி, சமர்ப்பணம், திருவருட் பிரசாதம் வழங்கல் முதலியன. (அடியவர்கள் காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை எண் ணெய்க்காப்பு சாத்துதல்),

**மாலை 6.00 மணி முதல் :** விநாயகர் வழிபாடு, விம்ப சந்தி பூஜை, யாக பூஜை, பூர்வசந்தான நியாசம ஹோமம், ஸ்பரசாகுதி, தீபாராதனை முதலியன.

**நாளை 03.06.2022 வெள்ளிக்கிழமை காலை 5.00 மணி முதல்** விநாயகர் வழிபாடு, யாக பூஜை, ஹோமம், மகா பூர்னாகுதி, தீபாராதனை, சர்வாஞ்சலி, சமர்ப்பணம், தானங்கள், பலிகள், கும்ப வீதிப் பிரதட்ணம், இராஜகோபுர தூபிகள் அபிஷேகம், மூலவர், மறாகும்பாபிஷேகம், பரிவாரமூர்த்திகள் கும்பாபிஷேகம், எசமான் அபிஷேகம், தசதர்சனம், ஆசீர்வாதம், ஆசியுரை, மகாபிஷேகம், அன்னதான நிகழ்வுகள் நடைபெறும்.

**மாலை 6.00 மணி முதல் :** திருவூஞ்சல், விஷேட பூஜை, வசந்த மண்டப பூஜை, சுவாமி பூந்தண்டிகையில் வீதியுலா வரும் காட்சி இடம்பெறும்.

### கும்பாபிஷேக குருமார் விபரம்

**அருளாசி வழங்குபவர்கள் :** கிரியா கலாமணி கலாநிதி சிவஸ்ரீ.நா. சோமாஸ்கந்தக் குருக்கள் - சுன்னாகம்
இன்னிசை வாருதி சிவஸ்ரீ.முத்து ஜெகன்நாதக் குருக்கள் - திருமலை

**ஆலய பிரதம குரு**
கிரியா தத்துவநிதி
சிவஸ்ரீ தி. கிருஷ்ணமூர்த்திக் குருக்கள்

**பிரதிஷ்டா பிரதம குரு சேவை**
முத்தமிழ் குருமணி சகலாகம சங்கிரகர்
சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள்
(ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்)

**சர்வசாதக சேவை**
ஆகம வைதீகபூசனம் :
சிவஸ்ரீ மு. ரவிபாஸ்கரக்குருக்கள்
சாதகரத்னா :
பிரம்மஸ்ரீ பரமசனாதன சர்மா
சிவாகமபூசனம் :
பிரம்மஸ்ரீ விக்னேஸ்சிவம் (இந்தியா)
சிவஸ்ரீ ச.மதுசூதனக்குருக்கள் (சித்தாங்கேணி)

**ஸ்தானிக குரு**
சிவபிரம்மஸ்ரீ கி. கௌரீதர சர்மா

**வேத பாராயணம்**
மொடோன் இந்து ஆகம கலை கலாசார
வேதாகம குருகுல மாணவர்கள்

### கலந்து சேவையாற்றும் குருமார்கள்

சிவஸ்ரீ பாலகசேணசன் குருக்கள் (நயினாதீவு)
சிவஸ்ரீ சர்வேஸ்வர ஸ்ரீ காந்தக் குருக்கள் (சுன்னாகம்)
சிவஸ்ரீ கௌரிபாலக் குருக்கள் (கோப்பாய்)
சிவஸ்ரீ வரத இராஜேஸ்வரக் குருக்கள் (தாவடி)
சிவஸ்ரீ பாலேந்திரக்குருக்கள் (நீராவியடி)
சிவஸ்ரீ ச. சங்கரராஜ நாகேஸ்வரக்குருக்கள் (கொழும்புத்துறை)
சிவஸ்ரீ இ. ரமணதரக் குருக்கள் (கோண்டாவில்)

சிவஸ்ரீ ந. செல்வராஜ குருக்கள் (திக்கம்)
சிவஸ்ரீ ந.கஜேந்திரக்குருக்கள் (மாதகல்)
சிவஸ்ரீ ம. பிரபாகரக்குருக்கள் (யாழ்ப்பாணம்)
சிவஸ்ரீ ம. சுதாகரக்குருக்கள் (யாழ்ப்பாணம்)
சிவஸ்ரீ சிவகணேசக் குருக்கள் (பருத்தித்துறை)
சிவஸ்ரீ நா.குகணேசக் குருக்கள் (உடுவில்)
சிவஸ்ரீ இ. விக்னேஸ்வரக்குருக்கள் (கொக்குவில்)

சிவஸ்ரீ ந. கேசவக்குருக்கள் (தாவடி)
சிவஸ்ரீ ஜெ.சந்திரசேகரக்குருக்கள் (உரும்பிராய்)
சிவஸ்ரீ. க. ஜெயராமக்குருக்கள் (தம்பாலை)
சிவஸ்ரீ சி.கிருபாகரக்குருக்கள் (முல்லைத்தீவு)
சிவஸ்ரீ.ச.சந்தானக்குருக்கள் (நந்தாவில்)
சிவஸ்ரீ.கி.ஹரிஹரசுதக்குருக்கள் (கோண்டாவில்)
சிவஸ்ரீ ராஜராஜேஸ்வரக் குருக்கள் (யாழ்ப்பாணம்)

### மண்டலாபிஷேகம் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும்

**கட்டட புனர்நிர்மாணம் / வர்ணவேலை**
ஸ்தபதி க. புருஷோத்மன்
பெரிய குத்தவக்கரை, சீர்காழி, தென்னிந்தியா

**யாக அமைப்பு**
திரு. அ. கருணாகர ஐயா பிள்ளைகள்
உரும்பிராய்

**மங்கல வாத்தியம்**
திரு. சிவதாஸ் குழுவினர்
இணுவில்

**பூமாலை அலங்காரம்**
திரு.ஈ. துஸ்யந்தன்
உரும்பிராய்

**ஒலி, ஒளி அமைப்பு**
திரு. சி.சிவனேசன்
யமுனா சவுண்ட்ஸ் (மல்லாகம்)

அடியார்கள் அனைவரும் வருகை தந்து ஓடையம்பதி விநாயகப் பெருமானைத் தரிசித்து ஆசியும் அருளும் பெற்றேகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம் (CR 36053) (3/6) சுபம் ஆலய பரிபாலன சபையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையில் பரிசாரகராக கடமைபுரியும்
**திருமதி கனகலிங்கம் நாகேஸ்வரி**
அவர்களின் அன்புத்தந்தையார்
**அமரர் திரு. குருநாதர் செல்லர்**
அவர்கள் 30.05.2022 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணியாளர் நலன்புரிச்சங்கம்**
**சித்தபோதனா வைத்தியசாலை, தைகதடி**

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (04.05.2022) புதன்கிழமை
சிவபதமடைந்த
**அமரர் திருமதி நேசமலர் ஆனந்தராஜா**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (01.06.2022) புதன்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. மேலும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள் நாளை (03.06.2022) வெள்ளிக் கிழமை காலை 9.00 மணியளவில் மல்லாகம் சோடாக் கொம்பனி ஒழுங்கையில் அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய திருமண மண்டபத்தில் அன்னாரின் நினைவாக நடைபெறும் மதியபோசன நிழ்வில் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக் கின்றோம்

**குடும்பத்தினர்**

**சோடாக்கொம்பனி ஒழுங்கை,**
**மல்லாகம்**

(cr.36055) (2.6)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

வவுனியா ஓமந்தை கதிரவேலர் பூவசரன்குளத்தைப்
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
**அமரர் திருமதி தெய்வநாயகி**
**சிவசுப்பிரமணியம்**



அமைதியின் உருவமாகவும்
அடக்கத்தின் பிறப்பிடமாகவும் பண்பின்
பெருந்தகையாகவும் பாசத்தின்
உறைவிடமாகவும் எம் மத்தியில் அன்பு
ஒளியாக இருந்த உத்தமரே! மண்ணோடு
உங்கள் பூதவுடல் மறைந்து ஐந்து ஆண்டுகள்
ஆனாலும் உங்கள் நினைவுகள் எங்கள்
இதயத்தில் இருந்து ஒருபோதும்
மறைவதில்லை.

*உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல*
*இறைவனை வேண்டுகின்றோம்.*

**தோற்றம்** 26.08.1946 **மறைவு** 28.05.2017

**திதி: திருதியை**
**(02.06.2022)**

நீங்கா நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

49/92, கோவில் வீதி, குருமன்காடு, வவுனியா.
**024 222 0418**

(cs.1004) (2.6)

# மரண அறிவித்தல்

**பிறப்பு** 13 - 03 - 1961



**இறப்பு** 01 - 06 - 2022

## சுவாம்பிள்ளை அலன்பாக் றோச் (இராசு)

15/17 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், 42 இராசாவின் தோட்டம் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாம்பிள்ளை அலன்பாக் றோச் (இராசு) நேற்று (01.06.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை, அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஜேம்ஸ் பொன்கலன், மேரி மாகிறேட் (பாக்கியம்) தம்பதிகளின் மூத்த மருமகனும் நொய்லின் அனிற்றா (முன்னாள் ஆசிரியை - யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை, தற்பொழுது வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) அவர்களின் ஆருயிர்க் கணவரும் றுக்ஷன் (பொறியியல் பீடம், 1ம் வருடம் மொறட்டுவ பல்கலைக்கழகம்), கிஷோபன் (உயர்தர மாணவன் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி) அவர்களின் பாசமிகு தந்தையும் மாகிறட் (ஜெயமணி), வசந்தா, ஜெசிந்தா காலஞ்சென்ற சகாயராஜன் மற்றும் ரவி றோக் (அழகு) ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.06.2022) வியாழக்கிழமை மு.ப.10.00 மணியளவில் நடைபெற்று புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**42 இராசாவின் தோட்ட வீதி,**
**யாழ்ப்பாணம்**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**

# காட்டுவிநாயகர் ஆலயத்தில் கோவலன் கண்ணகி கூத்து

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங் கலை முன்னிட்டு ஆண்டுதோறும் நடத்திவரும் கோவலன் கண்ணகி கூத்து இன்று இரவு 7 மணிக்கு முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

அண்ணாவியார் கலாபூஷணம் ஆறுமுகம் பால சுந்தரத்தின் நெறியாள்கையில் உதவி அண்ணா வியார் க.இந்துசனும் இணைந்து புதிதாகத் தயா ரிக்கப்பட்ட கோவலன்கண்ணகி நாட்டுக்கூத்து வட்டக்களரியில் அரங்கேறவுள்ளது. ஆகையால் கூத்தைப் பார்வையிட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு காட்டுவிநாயகர் நாடக மன்றத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-14,19)

# மணமகன் தேவை

அரச பணிபுரியும் 84, 86 (12, 7 இல் செவ்வாய்) ஆம் ஆண்டில் பிறந்த பெண்களுக்கு அரச, தனியார் துறையில் வரன் தேடுகின்றனர். (பா.கி.60 இக்கு மேல்) தரகர் தேவையில்லை.

**whatsapp: 077 049 5736**

# காணி தேவை

யாழ்ப்பாணம் மற்றும்
சாவகச்சேரி நகரை அண்மித்த
பகுதியில். A-9 வீதியை
அண்மித்த இடங்களில்
5 பரப்புக் காணி தேவை.

(cs.688) (2.6)

**077 143 9383, 075 143 9389**

# மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989 இல் பிறந்த அழகிய நற்குணமுடைய அரச பதவியில் உள்ள பட்டதாரி மணமகளுக்கு படித்த பண்பான நற்குணங்களுடைய அரச பதவியில் உள்ள மணமகனை இலங்கையில் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(cr.36057) (2.6)

**070 665 5223, 0041 7821 94444**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 03.05.2022 செவ்வாய்க்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
**அமரர்**
**செபமாலை ஜெனிதாஸ்**
அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (02.06.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.110 அம்பலவாணர் வீதி,**
**உடுவில்.**

(cs.44977) (2.6)

**குடும்பத்தினர்**

# ஆதன உரிமைமாற்ற அறிவித்தல் வலிகாமம் வடக்கு பிரதேசசபை - மல்லாகம் உப அலுவலகம்

உரிமையாளர் பெயர் : திரு.நவரத்தினம் நரேந்திரன் (ஐக்கிய இராச்சியம்)
விண்ணப்பதாரர் பெயர் : திரு.சுப்பிரமணியம் சயாபதி
முகவரி : அறுவத்தை, தெல்லிப்பழை.

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 20, ஆதன இல 170,178 யாழ்ப்பாண வீதியில் அமைந்துள்ள மல்லாகம் கோவிற்பற்றும் இறையுமான சிலும்பிலார் கொள்கை என்ற ஆதனம் சொந்தக்காரர் உரிமைகோருபவர் பேரின்பநாயகம், சொந்தக்காரர் உரிமை கோருபவர் என்ற பெயரில் ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் ந.தம்பிமுத்தன் முகதாவில் நிறைவேறிய 12741 / 22.07.2021 இலக்கத்தில் முடிந்த உறுதி மூலம் நவரத்தினம் கைம்பெண் சர்வாம்பிகை என்பவர் தனது மகன் நவரத்தினம் நரேந்திரனுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். 12741 இலக்க உறுதியில் தாய் உறுதியாக காட்டப்பட்ட பிரசித்த நொத்தாரிஸ் A.சீவரத்தினத்தினால் எழுதப்பட்ட 04.02.1911ம் திகதிய 8014 இலக்க உறுதி மற்றும் மல்லாகம் மாவட்ட நீதிமன் றத்தில் நடைபெற்ற P/397 இலக்க பிரிவிடல் வழக்கு ஆகியவற்றின் ஆவணங்கள் இல்லாது காணப்படுவதாக விண்ணப்பதாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பில் 12741 உறுதியில் சர்வாம்பிகையின் தகப்பனாரான காலஞ்சென்ற சின்னப்பு மண்டலநாயகத்திற்கும் அவரின் சகோதரர்களான சின்னப்பு செல்லத்துரை, சின்னப்பு சுவாமிநாதன் ஆகியவர்களுக்கும் சொந்தமாக இருந்து பின்பு குறித்த சின்னப்பு செல்லத்துரை, சின்னப்பு சுவாமிநாதன் ஆகியவர்கள் சந்ததியின்றி காலஞ்சென்றதால் அவர்களின் பாகத்தி னையும் சின்னப்பு மண்டலநாயகம் ஆட்சி செய்து வந்தார். பின்னர் அவரும் இறக்க அவரின் பின் அவரின் மூன்று பிள்ளைகளும் ஆட்சி செய்து வந்தனர். பின்னர் இவர்களுக்கிடையில் பங்கு பிரிப்பது தொடர்பாக மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் P/397 என்ற பிரிவிடல் வழக்கு நடத்தப்பட்டு பின்பு அவ்வழக்கை தொடராமல் கைவிட அவர்களில் ஒருவரான நவரத்தினம் சர்வாம்பிகை முழுமையான ஆதனத்தினையும் தனது ஆட்சியில் வைத்துள்ளார் என வெளிப் படுத்தப்பட்டு காணப்படுகிறது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் கோவிற்பற்றும் இறையுமான "சிலும்பிலார் கொள்கை" உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் M.சிற்றம்பலம் அவர்களின் 5053/ 17.01.2022 இலக்க நிலஅளவைப்பட வரைபடத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு 08 குளி 08.41 -

கிழக்கு - K.K.S வீதி
வடக்கு - நவரத்தினம் மகள் நாகேஸ்வரியின் ஆதனம்
மேற்கு - தர்மநாதன் மனைவி அம்பிகாதேவியின் ஆதனம்
தெற்கு - 12 அடி பாதை

மேற்குறித்த ஆதனத்தை நவரத்தினம் - நரேந்திரன் - என்னும் பெயரில் - பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் - ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் நவரத்தினம் நரேந்திரன் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். என்பதனையும் - இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர், வலிகாமம் வடக்குபிரதேசசபை,**
**காங்கேசன்துறை.**
**(கொல்லங்கலட்டி)**

(cs.1048A) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவில் நான்கு ஆண்டுகள்

## அமரர் கோபாலபிள்ளை குகன்



(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் அதி சிறப்புத்தரம்)

திதி : திருதியை (02.06.2022)

மண் மகிழ 30.10.1985 மண் நெகிழ 18.05.2018

ஆருயிரே அன்புப் பொக்கிஷமே - குகன்
உந்தன் குரலோசை கேட்டு
வருடங்கள் நான்கு கடந்ததுவோ....
நேற்றுப்போல் உள்ளதடா நம்ப முடியவில்லையே
ஒரு முறை பேசாயோ.....
ஒரு நிமிடம் கூட எமை பிரிந்ததில்லையே!
எமைப் பிரிந்து தனியே எங்கு சென்றாயோ?
புன்னகை மன்னவா!
இறுதிவரை துணையிருப்பாய் என்ற
இனிய கனவுகள் சிதைந்ததடா - உந்தன் அன்புக்கு
இப்புவியில் வேறெதுவும் ஈடாகாது - உத்தமனே.

உந்தன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

நடராஜா வீதி,
வேலணை மேற்கு, வேலணை-8

தற்காலிக முகவரி :
இந்து மகளிர் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(CS 1050) (3/6)

# ஆதன உரிமைமாற்ற அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை - மல்லாகம் உப அலுவலகம்

**உரிமையாளர் பெயர் :- திரு நவரத்தினம் நரேந்திரன் (ஐக்கிய இராச்சியம்)**
**விண்ணப்பதாரர் பெயர் :- திருமதி.கதிரித்தம்பி கனகராணி (அற்றோனித்தத்துவக்காரி)**
**முகவரி :- மகாதனை, தெல்லிப்பழை.**

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 21. ஆதன இல:17 பங்களா வீதியில் அமைந்துள்ள மல்லாகம் கோவிற்பற்றும் இறையுமான பைங்கிலிய ஓடை என்ற ஆதனம் சொந்தக்காரர் உரிமைகோருபவர் நவரத்தினம் சத்தியேந்திரன் என்ற பெயரில் ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் ந.தம்பிமுத்தன் முகதாவில் நிறைவேறிய 12742 / 22.07.2021 இலக்கத்தில் முடிந்த உறுதி மூலம் நவரத்தினம் கைம்பெண் சர்வாம்பிகை என்பவர் தனது மகன் நவரத்தினம் நரேந்திரனுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். 12742 இலக்க உறுதியில் தாய் உறுதியாக காட்டப்பட்ட பிரசித்த நொத்தாரிஸ் A.சீவரத்தினத்தினால் எழுதப்பட்ட 04.02.1911ஆம் திகதிய 8014 இலக்க உறுதி மற்றும் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற P/1430 இலக்க பிரிவிடல் வழக்கு ஆகியவற்றின் ஆவணங்கள் இல்லாது காணப்படுவதாக விண்ணப்பதாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பில் 12742 உறுதியில் சர்வாம்பிகையின் தகப்பனாரான காலஞ்சென்ற சின்னப்பு மண்டலநாயகத்திற்கும் அவரின் சகோதரர்களான சின்னப்பு செல்லத்துரை. சின்னப்பு சுவாமிநாதன் ஆகியவர்களுக்கும் சொந்தமாக இருந்து பின்பு குறித்த சின்னப்பு செல்லத்துரை. சின்னப்பு சுவாமிநாதன் ஆகியவர்கள் சந்ததியின்றி காலஞ்சென்றதால் அவர்களின் பாகத்தினையும் சின்னப்பு மண்டலநாயகம் ஆட்சி செய்து வந்தார். பின்னர் அவரும் இறக்க அவரின் பின் அவரின் மூன்று பிள்ளைகளும் ஆட்சி செய்து வந்தனர். பின்னர் இவர்களுக்கிடையில் பங்கு பிரிப்பது தொடர்பாக மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் P/1430 என்ற பிரிவிடல் வழக்கு நடத்தப்பட்டு பின்பு அவ்வழக்கை தொடராமல் கைவிட அவர்களில் ஒருவரான நவரத்தினம் சர்வாம்பிகை முழுமையான ஆதனத்தினையும் தனது ஆட்சியில் வைத்துள்ளார் என வெளிப்படுத்தப்பட்டு காணப்படுகிறது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் கோவிற் பற்றும் இறையுமான "சிலும்பிலார் கொள்கை" உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் M.சிற்றம்பலம் அவர்களின் 5054/ 17.01.2022 இலக்க நிலஅளவைப்பட வரைபடத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு 15 குளி 07.88

கிழக்கு - தியாகராசா உதயதாசின் ஆதனம் வடக்கு- றோட்டு மேற்கு- முருகேசு இராஜரத்தினம். இரத்தினசிங்கம் புவனேஸ்வரியின் ஆதனம் தெற்கு- தட்சணாமூர்த்தி கிருஸ்ணகுமார். சிவலிங்கம் மனைவி சோதி. வல்லிபுரம் மனைவி சாந்தா ஆகியவர்களின் ஆதனங்கள்.

மேற்குறித்த ஆதனத்தை நவரத்தினம் நரேந்திரன் என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளி நாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் நவரத்தினம் நரேந்திரன் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.சோமசுந்தரம் சுகிர்தன்**
தவிசாளர்.
வலிகாமம் வடக்கு பிரதேசசபை.
காங்கேசன்துறை.
(கொல்லங்கலட்டி)

# மரண அறிவித்தல்

பிறப்பு 16 - 06 - 1943



இறப்பு 31 - 05 - 2022

## முத்துலிங்கம் நடராசா

காரைநகர் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 45, நாயன்மார் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் நடராசா அவர்கள் நேற்று முன்தினம் (31.05.2022) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துலிங்கம், அன்னபூரணம் தம்பதியினரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற முருகுப்பிள்ளை பரமேஸ்வரி அவர்களின் அன்பு மருமகனும் லீலாவதியின் அன்புக் கணவரும், பஞ்சலிங்கம் நவரத்தினம், நாகேஸ்வரி, செல்வராணி, உதயகுமாரி மற்றும் காலஞ்சென்ற சந்திரகலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், லதா, லலிதா, காலஞ்சென்ற கல்பனா மற்றும் மாலதி (பிரான்ஸ்), கிருஷ்ணா, விஜயானந்தன் (பிரான்ஸ்), சர்மிளா, கஜேந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருஷ்ணராஜாவின் (சின்னவன்), வளர்ப்புத் தந்தையும், அனுர, ரகு, அசோக்குமார் (பிரான்ஸ்), ராஜ்குமார், கஜேந்தி (பிரான்ஸ்), ராஜேந்திரன் (ரங்கன்), தனுஷ்யந்தன் ஆகியோரின் நேசமிகு மாமனாரும், காலஞ்சென்ற சத்தியா மற்றும் ஜனித்த, துலாஷினி, சிவதாருணி, அகிலாஷ் (கொழும்பு), சங்கீத், பிரியங்கா, அபீஸ்கர், அபிஷாந், அஞ்சலீனா (பிரான்ஸ்), லக்ஷாயினி, பிரகாசினி, கிஷாளினி, விகாஷ், அஸ்வின், ஆதீஸ் (பிரான்ஸ்), ஹரிஷாந், துவாரஷாந், ஸாருஹேஷ், பிரவீன், பிரதிக்ஷா, ஜயந், தினேஷ், வினேஷ்காந், பிரசாந் ஆகியோரின் பேரனும் ஜெய் கிறிஸ், பிரணவேஷ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (05.06.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


லதா : 076 713 3154
ரங்கன் : 077 415 6139

தகவல்:
குடும்பத்தினர்

(CS 4498) (3/6)

# 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 14 - 11 - 1954



மறைவு 03 - 05 - 2022

## அமரர் கதிரவேலு நடேசு

(ஓய்வு பெற்ற மலேரியா தடைப்பகுதி உத்தியோகத்தர்)

கடந்த 03.05.2022 அன்று சிவபதமடைந்த எமது தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு எமது துயர் பகிர நேரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனுதாபச் செய்திகளை தொலைபேசி, சமூக வலைத் தளங்கள் மூலம் தெரிவித்தவர்களுக்கும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்த வர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது தந்தையின் அந்தியேட்டி கிரியைகள் கடந்த (31.05.2022) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (02.06.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கைதடி மத்தி,
கைதடி.

077 445 4110

குடும்பத்தினர்

(CR 36063) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றும்...

லிட்ரோ நிறுவனம் நாடு முழுவதும் 50 ஆயிரம் சிலிண்டர்களை நேற்றுமுன்தினத்திலிருந்து விநியோகித்து வருகின்றது. அதற்கு அமைவாக யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் 850 சிலிண்டர்கள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றில் யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளுக்கு தலா 300 சிலிண்டர்கள் வீதம் 600 சிலிண்டர்களும், வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட ஏனையவற்றுக்கு 250 சிலிண்டர்களும் விநியோகிக்கப்பட்டிருந்தன.

இன்றைய தினமும் 600 சிலிண்டர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் விநியோகிக்கப்படவுள்ளன. யாழ்ப்பாணம், நல்லூர், உடுவில், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளுக்கு தலா 150 சிலிண்டர்கள் வீதம் வழங்கப்படவுள்ளன. அத்துடன் வர்த்தக நிலையங்கள் உள்ளிட் ஏனைய விநியோகத்துக்காக 150 சிலிண்டர்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பங்கீட்டு அட்டைக்கு கிராம அலுவலர்களின் கண்காணிப்பிலேயே எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படுகின்றன. வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட ஏனையவற்றுக்கான விநியோகம், யாழ்ப்பாண மாவட்டத்துக்கான எரிவாயு விநியோகஸ்தர் ஊடாக நேரடியாகவே மேற்கொள்ளப்படுகின்றது. (அ-ஒ-5)

## எரிவாயு விநியோக ஒழுங்கு 02.06.2022

### யாழ்ப்பாண பிரதேச செயலகம்

| பெயர் | பிரிவுகள் | சிலிண்டர் எண்ணிக்கை |
|---|---|---|
| ரட்ணா ஸ்ரோர்ஸ் | ஜே/68,69,70,71,72 | 20 |
| பஸ்ரியன் ஸ்ரோர்ஸ் | ஜே/73,74,75,76 | 25 |
| மரியே மல்ரி சொப் | ஜே/68 | 20 |
| பிரிடி ஸ்ரோர்ஸ் | ஜே/61,62 | 15 |
| யாழ் சுப்பர் | ஜே/64,65,66 | 10 |
| மயூரன் ஸ்ரோர்ஸ் | ஜே/64,65 | 15 |
| தஸ்வின் ஸ்ரோர்ஸ் | ஜே/83,81 | 20 |
| துகி வேர்க்ஸ் | ஜே/78,77 | 25 |

### நல்லூர் பிரதேச செயலகம்

| பெயர் | பிரிவுகள் | சிலிண்டர் எண்ணிக்கை |
|---|---|---|
| துஷியந்தன் மல்ரி சொப் | ஜே/103,106 | 25 |
| சசிரேகா ரேடிங் | ஜே/112 | 25 |
| ரஞ்சன் ஸ்ரோர்ஸ் | ஜே/114 | 25 |
| செல்வன் ஸ்ரோர்ஸ் | ஜே/109 | 25 |
| ஜித் பூட் சிற்றி | ஜே/92 | 25 |
| கணபதி களஞ்சியம் | ஜே/120,119 | 25 |

### கோப்பாய் பிரதேச செயலகம்

| பெயர் | பிரிவுகள் | சிலிண்டர் எண்ணிக்கை |
|---|---|---|
| ஏஎம்ரி | ஜே/257,258,259 | 45 |
| அனுமன் சுப்பர் மார்க்கெட் | ஜே/260 | 10 |
| மாஸ்டர் ஸ்ரோர்ஸ் | ஜே/260 | 10 |
| சிவா ஸ்ரோர்ஸ் | ஜே/260 | 10 |
| கவி ஸ்ரோர்ஸ் | ஜே/261 | 20 |
| கைலாயர் சொப் | ஜே/261 | 10 |
| குட்டி ஸ்ரோர்ஸ் | ஜே/261 | 15 |
| விதுன் ஸ்ரோர்ஸ் | ஜே/262 | 10 |
| ஜெயாகொம்மினிகேஷன் | ஜே/262 | 10 |
| தேவராசா ஸ்ரோர்ஸ் | ஜே/262 | 10 |

### உடுவில் பிரதேச செயலகம்

| பெயர் | பிரிவுகள் | சிலிண்டர் எண்ணிக்கை |
|---|---|---|
| லிங்கம் ஸ்ரோர்ஸ் | ஜே/193,194,192 | 25 |
| கமலதேனுஸ்ரோர்ஸ் | ஜே/195,196,197,198, 202,203 | 25 |
| கீர்த்தனன் ஸ்ரோர்ஸ் | ஜே/183,188,189,190,191 | 25 |
| ரவி ஸ்ரோர்ஸ் | ஜே/198,199,200 | 25 |
| சிவகுரு ஸ்ரோர்ஸ் | ஜே/201,202,203, 204,205,206 | 25 |
| சிவநாதன் ஸ்ரோர்ஸ் | ஜே/182,184,185,186,187 | 25 |

## இறக்குமதிகளின்...

பொருளாதார நெருக்கடி உச்சம் பெற்றுள்ள நிலையில் இலங்கை ரூபா மற்றும் டொலர் கையிருப்பு இன்றி பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அரச ஊழியர்களுக்கான மாதாந்தச் சம்பளத்தை வழங்குவதற்காக அரசாங்கம் மாதாந்தம் ரூபா நோட்டுக்களை அச்சடிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

நாட்டின் பண வீக்கம் பெரிதும் உயர்ந்துள்ள நிலையில், அரசாங்க வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் பல்வேறு வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பெறுமதி சேர் வரி (வற் வரி), தொலைத்தொடர்பு வரி என்பன நேற்றுமுன்தினம் அதிகரிக்கப்பட்டிருந்தன. இந்தநிலையில் இறக்குமதிப் பொருள்களுக்கான வரிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கார்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கான ரயர்கள் மீதான வரி 50 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வளிச் சீராக்கிகள் (ஏசி), சலவை இயந்திரங்கள், ரைஸ் குக்கர், மைக்ரோவேவ், குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் அலைபேசிகள் மீதான வரி 100 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. மின்சாதனங்களுக்கான வரிகள் 15 சதவீதத்தால் உயர்ந்துள்ளன. அதேவேளை, சொக்லெட் பொருள்களின் விலைகள் 200 சதவீதத்தால் உயர்வடையும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இறக்குமதி செய்யப்படும் தயிர், பட்டர் மற்றும் பால் பொருள்கள் மீதான சிறப்புப் பொருள் கட்டணம் ஆயிரம் ரூபாவில் இருந்து 2 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## சுகவீனமுற்ற...

உயிரிழந்தவராவார். கடந்த நான்கு நாள்களாக சுகவீனமடைந்திருந்த இளைஞர் நேற்றுக் காலை வீட்டில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞரின் உடல் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது. இளைஞர் வாந்தி எடுத்திருந்த நிலையில் வாந்தி சுவாசப் பாதைக்குள் சென்றதே உயிரிழப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (அ-எ-125)

## பரீட்சை...

மாணவர்களின் மோதலைத் தடுக்கச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தரும் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இரு மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே இந்த மோதல் சம்பவம் நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவத்தில் மாணவன் ஒருவர் தலையில் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-159)

## 369 பொருள்களுக்கான...

செல்லுப்படியாகும் உரிமம் இல்லாவிடின், அத்தியாவசியமற்ற 369 பொருள்களை இலங்கைக்குள் இறக்குமதி செய்வதை மட்டுப்படுத்தி கடந்த மார்ச் மாதம் 9 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

இந்தநிலையில் அவற்றை செல்லுப்படியாகும் உரிமம் இன்றி இறக்குமதி செய்ய அனுமதி வழங்கி நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதேவேளை, 8 வீதமாக இருந்த பெறுமதி சேர் வரி (வற் வரி) நேற்றுமுதல் 12 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதனால் பொருள்களின் விலைகள் உயர்வடையும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-இ)

## மயங்கி...

முறைப்பாடு பதிவு செய்துவிட்டு வீடு திரும்பிய வயோதிபப் பெண் ஒருவர், வீட்டில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி, வதிரியைச் சேர்ந்த சபாநாயகம் இலட்சுமிப்பிள்ளை (வயது-72) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் நேற்றுப் புதன்கிழமை காலை நெல்லியடிப் பொலிஸ் நிலையம் சென்று, தனது அயல்வீட்டுக்காரர் தன்னைத் தாக்கினார் என்று முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாடு செய்துவிட்டு வீடு திரும்பிய அவர், பிற்பகல் 2 மணியளவில் மயங்கி வீழ்ந்துள்ளார்.

அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னரே இறப்புக்கான காரணம் தெரியவரும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## மதுபான...

டுள்ளது.

பெறுமதி சேர் வரி (வற் வரி) அதிகரிப்புக் காரணமாகவே மதுபானப் போத்தலின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, பியர் போத்தல் ஒன்றின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## துமிந்த...

ஸ்ரீஜயவர்த்தனபுர மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த துமிந்த சில்வா, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டிருந்த நிலையில், ஜனாதிபதியின் உத்தரவுக்கு உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் இடைக்காலத் தடை விதித்தது.

அதன்பின்னர் திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா நேற்று முற்பகல் ஸ்ரீஜயவர்த்தனபுர மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஆயினும் நேற்றுப் பிற்பகல் மருத்துவமனைக்குச் சென்ற குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் குழு, துமிந்த சில்வாவை கைது செய்தது. (அ-எ-22)

## சிகரெட்....

என்று இலங்கை புகையிலை நிறுவனத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பெறுமதி சேர் வரியை (வற் வரி) அதிகரிப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் காரணமாக இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் புதிய விலை விவரம் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொலர் கையிருப்பு இருந்தும் மருந்துகளை வாங்கவில்லை!

## அதனால்தான் தட்டுப்பாடு என கோப் குழுவில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 2

இந்தியக் கடனுதவியில் கிடைத்த நிதி உட்பட சுமார் 330 மில்லியன் டொலர் நிதி மருந்துக் கொள்வனவுக்காகக் கையிருப்பில் இருந்தும், அதிகாரிகளின் வினைத்திறனற்றதும் விவேகமற்றதுமான நிர்வாகமே நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மருத்துவ நெருக்கடிக்குக் காரணம் என்று கோப் குழு சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கை அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் கோப் குழுவுக்கு நேற்றுமுன் தினம் அழைக்கப்பட்டனர். இதன்போதே இவ்வாறான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள் ளது. கோப் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

இந்தியக் கடனுதவியில் 200 மில்லியன் டொலர் நிதியுதவி கிடைக்கப்பெற்றிருந்தாலும் 2022 ஏப்ரல் 22ஆம் திகதி வரையில் 55.5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மருத்துவ உபகரண வழங்கல்களுக்கு மாத்திரமே அமைச்சின் மருத்துவ உப குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

இந்திய கடனுதவிக்கு மேலதிகமாக, மருந்துப் பொருள்கள் கொள்வனவுக்காகக்கிடைத்துள்ள உலக வங்கியின் கடன், உலக சுகாதார நிறுவனத்தின் உதவி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி மற்றும் ஏனைய நன்கொடையாளர்களிடமிருந்து கிடைத்துள்ள உதவிகள் முறையாகப் பயன்படுத்தவில்லை. இந்த அனைத்து உதவிகளும் 330 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகம். அவை இதுவரை செலவு செய்யப்படவில்லை. விரைவில் நிர்வாகத் தீர்மானங்கள் மற்றும் அனுமதியைப் பெற்று இந்த நிதியைப் பயன்படுத்தி மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்தால் 2023ஆம் ஆண்டின் நடுப் பகுதி வரை மருந்துப் பற்றாக்குறை ஏற்படாது - என்றார். (ம)

திருமாங்கல்யம் திருமண சேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தில் 1991, 1983 இல் பிறந்த உள்நாட்டு மணமகள்களுக்கு மணமகன்கள் தேவை. 1988 இல் பிறந்த R.C மணமகனுக்கு உள்நாட்டு மணமகள் தேவை.

thirumaangalyam.com

077 120 4651, 021 728 4433

A/L - 2024

(கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்)

ஆரம்பம்: 05.06.2022

காலை: 09.00 a.m.

D.M.I - Jaffna 077 848 0604

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 60 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ A-9 வீதியில் இருந்து இரண்டாவது காணி 100M தூரம்.
- ✓ கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100M மீற்றர் தூரம்.
- ✓ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி. ✓ நன்னீரூற்று
- ✓ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 M தூரம்
- ✓ மூன்று வழிப் பாதை மேட்டு நிலம்
- கைதடி சந்தி 500 M தூரம்
- ✓ 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ 1 பரப்பின் விலை 4 லட்சம்
- ✓ பார்வையிடும் நேரம் காலை 8 மணிமுதல் மாலை 6 வரை

தொடர்பு: 077 6234 204

077 2880 152

076 4365 814

(CS 1036) 1-6

நாவலர் கல்வி நிலையம்

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்.

A/L - 2024

கலை, வர்த்தகப் பிரிவு

ஆரம்பம்:

03.06.2022 வெள்ளிக்கிழமை காலை 9.00

கலைப் பிரிவு

- தமிழ் - A.K. கீர்த்திராஜன்
- அளவையியல் - P. கமல்
- இந்து நாகரிகம் - K. கமலதாஸ்
- புவியியல் - S.P. கரன்
- அரசியல் - S. தாரகன்
- வரலாறு - L. சுகந்தன்
- ஊடகவியல் - M. கோணேஸ்
- ICT - S. விதுஷன்
- கிறிஸ்தவம் - M. மயூரன்

வர்த்தகப் பிரிவு

- கணக்கீடு - V. தமிழ்ஈசன்
- பொருளியல் - M. விஜிதன்
- வணிகக்கல்வி - P. கோபிதன்

புதிய அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

T.P.: 076 166 1986

(cr.36058) (2.6)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில்

4 பரப்பு காணி விற்பனைக்குண்டு

நிலப்பரப்பு

- A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட் )
- A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

பார்வையிடும் நேரம் :

காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு : ஜெயம்

077 814 7389, 077 241 7589

TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்

A/L 2024 தொழில்நுட்ப பிரிவு

- பொறியியல் தொழில்நுட்பவியல்.
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்.
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்.
- I.C.T, விவசாயம், புவியியல், ஊடகக் கல்வி, கணிதம் (7), சித்திரம்.

திகதி : 05.06.2022 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : காலை 9.00 a.m.

(cr.8450)(2.6

Call Now: 077 017 5346

NEC

மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.

A/L - 2024

ஆரம்பம்:

03.06.2022 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி

வர்த்தகப் பிரிவு

- கணக்கீடு - K. பாலகஜன்
- பொருளியல் - S. ஜெயக்குமார்
- வணிகக்கல்வி - S.K. பாலசுபேஷ்
- ICT - V. நிரோஜன்

கலைப் பிரிவு

- தமிழ் - T.S. குகன்
- அளவையியல் - S. பவன்
- புவியியல் - S. சபரிதன்
- அரசியல் - N. பாபு
- வரலாறு - N.S. தர்மீகன்
- இந்துநாகரிகம் - K. கமலதாஸ்
- ஊடகவியல் - M.Y. கோணேஸ்
- ICT - V. நிரோஜன்
- கிறிஸ்தவம் - T. மயூரன்
- விவசாயம் - M.H. நிரோஜன்
- நாட.அரங்கியல் - I.பிரபா

கணித உயிரியல் பிரிவு

- பௌதீகவியல் - A. சுபில்
- இரசாயனவியல் - A. அரவிந்தன்
- இணை. கணிதம் - B. மயூரன்
- உயிரியல் - S.R. கண்ணா

(cr.36059) (2.6)

புதிய அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

T.P.: 076 535 0999

076 166 1986

NEW SCIENCE WORLD VICTORY MUST

NEW SCIENCE WORLD

கணித விஞ்ஞான பிரிவு

Tamil and English Medium

2024 A/L

- ஆரம்பம் : 05.06.2022 (ஞாயிற்றுக்கிழமை)
- நேரம் : 10.15 am

பௌதீகவியல் - திரு.R.குமரன்

திரு.R.குகன்

இரசாயனவியல் - திரு.டயஸ்

திரு.K.T.சிவகுமார்

உயிரியல் - திரு.N.T.கஜேந்திரன்

இணைக்கணிதம்- திரு.S.S.செந்தில்ராஜ்

திரு.V.ஹரிகரன்

அனுமதிகளை 05.06.2022 அன்று காலை 6 மணியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

077 3364 055

021 221 6690

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.